# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாஸ்கா
சிறப்பு மலர்

மலர் — 120 விலை 10/-

இதழ் — 6


25 — 03 — 1994


❋ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ❋

# கிறிஸ்துவின் ஒளி இதோ !

அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்து கொள்ள வேண்டும், சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்து கொள்ளவேண்டும்.

( I கொரிந்தியர் 15 : 53 )



இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக.

( உரோமர் 13 : 12 )

★ ★

## அழைப்பு

## புதுப்பித்தல் பகிர்தல்

### ஒரு தொடர் பயணம்

## மண்ணின் மக்களை முழுமையில் மீட்க... செல்வோம்

● S. J. இம்மனுவேல் அடிகள்

"புதிய யுகம் ஆரம்பிக்கட்டும். தூயஆவியின் ஏவுதலை அடக்கவேண்டாம்; அமுக்க வேண்டாம். ஆங்காங்கே அவனவனின், அவளவளின் அருங்கொடைக்கேற்ப அனைவரும் அன்புடனும், பண்புடனும் பணியாற்ற எமது சபை விண்ணரசின் விழுமியத்தை மின்னி மின்னிக் காட்டும் சபையாகச் செல்லட்டும்". இவ்வாறு யாழ். மறைமாவட்டப் பிரதம குரவர் அருள்திரு S. J. இம்மனுவேல் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடந்தேறிய யாழ். மேய்ப்புப்பணி மாநாட்டின் இறுதி அமர்வின்போது ஆற்றிய முடிவுரையில் கூறினார்.

அவ்வுரையின் முழுத் தொகுப்பு பின்வருமாறு :

அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆயர் அவர்களே, சகோதர குருக்கள் துறவியரே சகோதர சகோதரிகளே!

இம்மாநாட்டின் தொடக்கத்தில் திசை நோக்குச் சிந்தனைகள் சிலவற்றை உங்கள் முன் வைத்தேன். இப்பொழுது இம்மாநாடு முடியும் வேளையிலும், அத்திசைகள் ஒருவிதத்தில் ஆவியின் உதவியாலும் உங்களின் ஒத்துழைப்பாலும் தெளிவாக எழுந்திருக்கும் சில கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன். இறைவனின் அருளும் உங்களது சகோதரத்துவ ஒத்தாசையும் என்னைத் தூண்டுகின்றன.

கடலினில் ஒருநாள் இயேசு
கடும்பய ணம்மேற் கொண்டார்
நடுவழிச் செல்லும் போது
நாடிய புயலும் காற்றும்
படகினை அசைக்கக் கண்டு
பதறிய சீடர் ஓடிக்
கடவுளின் மைந்தர் ஆங்குக்
கண்மூடித் தூங்கக் கண்டார்!
" இறைவனின் மைந்தா நாங்கள்
இறக்கின்றோம் காக்க" என்றார்!
" அரைகுறை விசுவா சத்தால்
அவதியுற் றோரே! நீங்கள்
கரையிலும் கலங்கி னீர்கள்
கடலிலும் கலங்கி னீர்கள்
இறைவனை நம்பி னோர்க்கு
என்னதான் முடியா தெ"ன்றார்!
காற்றொடு புயலும் நிற்கக்
கட்டளை யிட்டார் இயேசு!
தோற்றதோர் அரசன் போல
நின்றது சூறைக் காற்று!
ஆற்றலைக் கண்டா ரெல்லாம்
ஐயனைப் பணிந்தார் இந்த
மாற்றத்தைக் கண்டார் "வந்த
மாமன்னன் யாரோ?" என்றார்!

இயேசு காவியம் பக். 164

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

## குடும்பத்திற்கான மறைப்பணிகளில் கவனம் செலுத்துங்கள் !

□ திருத்தந்தை

குருத்துவம் எனும் திருவருட்சாதனம் உருவாக்கப்பட்ட பெரிய வியாழன் நினைவாக குருக்களுக்கான இவ்வாண்டுச் சிறப்புச் செய்தியை வெளியிட்ட திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் குடும்பத்திற்கான மறைப்பணிகளில் ஜெபத்தின் வழி சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அழைப்பை முன் வைத்தார்.

திருத்தந்தையின் செய்தியை பத்திரிகையாளர் கூட்டத்தில் வத்திக்கானில் வெளியிட்ட குருக்களுக்கான திருப் பேராயத்தின் தலைவர் கருதினால் கோசேகாட்சேஸ், ஒவ்வொரு குருவும் தங்கள் பெற்றோரிடம் மிகச் சிறப்பான முறையில் இவ்வுலகிலும் என்றென்றும் இணைக்கப்பட்டிருக்கின்றார் என்றார்.

திருநிலைப்படுத்தப்பட்ட தேவ அழைத்தல்களின் தொட்டிலாக விளங்கும் இல்லத் திருச்சபையில் குருக்கள் தங்கள் மேய்ப்புப்பணி அக்கறையில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று திருத்தந்தை விரும்புகிறார் எனவும் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்தார் கருதினால் காட்சேஸ்.

இன்று குடும்பங்களைத் துன்புறுத்தும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண குடும்பங்களுடன் இணைந்தும் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டியதன் தேவையையும் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

**பாதுகாவலன் அன்பர்களே!**

**உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# ஒரு தொடர் பயணம்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். மேய்ப்புப்பணி மாநாடு அமைதியும் பக்தியும் தவழ்ந்த சூழலில் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. இந்த மாநாட்டிலே யாழ் மறைமாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், இன்னும் மன்னார், திருகோணமலை – மட்டுநகர் தமிழ் மறை மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக 480 பேர் மட்டில் கலந்து கொண்டனர்.

மார்ச் 8இல் தொடங்கி ஆறு நாள்கள் நடைபெற்ற இம் மாநாடு யாழ் திருச்சபையின் வாழ்வையும் பொதுச் சமுதாய வாழ்வையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் விரிவாய் ஆய்ந்தது.

மாநாட்டு ஆரம்ப நிகழ்வாகிய திருப்பலியில் மூன்று ஆயர்கள், 80க்கு மேலான குருக்கள், மற்றும் துறவியர்கள்பல்லாயிரக்கணக்கான பொது நிலையினர் பங்குபற்றியதுடன், தென்னிந்திய திருச்சபையின் இரு ஆயர்கள் வருகை தந்ததும் கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்கு ஒரு மெருகைக் கொடுத்தது.

யாழ் பேராலயத்தில் நடைபெற்ற இவ் ஆரம்பத் திருப்பலி வேளையில் இடம்பெற்ற மறையுரையில், அழைப்பு, புதுப்பித்தல், பகிர்தல் எனும் மூன்று முக்கிய எண்ணக் கருத்துக்கள் இம் மாநாட்டின் நோக்கம் எனக் கூறிய யாழ் ஆயர், மாநாட்டின் இறுதிநாள் திருப்பலி வேளையில், இம் மும்முனை நோக்கம் ஒரு தொடர் பயணம் என்றும் விளக்கினார்.

தலத்திருச்சபை தூய ஆவியால் நிரப்பப்பட்டு வழி நடத்தப்படும் ஒரு குழுமம் என்பது இம்மாநாட்டில் தெளிவுறுத்தப்பட்டது. இதற்குச் சாட்சி பகருமாப்போல், மன்னார் ஆயர் மாநாட்டின் இறுதி அமர்வில் ஆற்றிய மதிப்புரையில், ‘இம்மாநாடு தூய ஆவியானவரின் ஒரு பெருவிழா; இம் மாநாட்டில் நம்மையெல்லாம் தூய ஆவி வழி நடத்தினார்’ என்று கூறினார்.

மாநாட்டில் இடம்பெற்ற இருபத்தைந்து அமர்வுகளிலும் இறைமக்களின் கூட்டுறவுணர்வு இடைவிடாது எதிரொலித்துக் கொண்டிருந்தது. இப்புத்துணர்வை தூண்டியெழுப்பிய இறைவனுக்கு நன்றி கூறும் அதேவேளையில், இம் மன உணர்வு தழைத்தோங்க எல்லாத் துறையினரும் தொடர்ந்து அயராதுழைக்க வேண்டும்.

சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் அகற்றச் செபிப்பதுடன், ஏழைகள், அகதிகள், ஒடுக்கப்பட்டோரின் அபலைக் குரலுக்குச் செவிமடுத்து அவர்கள் சார்பில் நின்று உழைப்பது நற்செய்திப் பணியாளர்களின் தலையாய கடமை எனும் இலட்சிய விழிப்புணர்வு இம்மாநாட்டில் தோன்றியது.

அன்பு, நீதி, சுதந்திரம் என்னும் நற்செய்திப் போதனையைப் புகுத்தி, புதியதொரு சமுதாயம் காணும் விடுதலை வீரர்களாகத் திருச்சபையினர் உழைக்கவேண்டுமென்ற நல்லுணர்வும் இம்மாநாட்டில் பிறந்தது.

இவ்வாறு இம்மாநாட்டில் ஏற்பட்ட நல்லெண்ணங்களையும் புத்துணர்வுகளையும் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் அவற்றை நாம் செயல்வடிவில் அமுல்படுத்தத் தயங்கினால் அவை வெறும் பட்டியலாகவே அமையும்.

எனவே, இம்மாநாட்டின் தீர்மானங்களையும், பரிந்துரைகளையும் செயல்படுத்தும் பொறுப்பு நமக்கு உண்டு. மேல் நடவடிக்கைச் செயற்குழு ஒன்றை அமைத்து பல்வேறு முனைகளில் அயரா முயற்சிகள் மேற்கொள்வதுதான் மாநாட்டின் தொடர் பயணத்துக்கும் வெற்றிக்கும் வழிகோலும் என்பதை எவரும் மறுக்கமாட்டார்.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்தவ வாழ்வு

(சென்றஇதழ் தொடர்ச்சி)

34. தன்னைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவன் மெய்ப்பண்பார்ந்த விதத்தில் நடந்து கொள்ளுகிறான். தாழ்மையும், தன்னடக்கமும் உடையவனாயிருக்கிறான். தனது குறைபாடுகள், பலவீனங்களை அறிந்திருப்பதனாலும், அனைத்தும் இறைவனால் இலவசமாக மனிதனுக்கு அளிக்கப்பட்டிருப்பதனால் அகங்காரம் ஒரு மாயத் தோற்றமே என்பதை அறிந்திருப்பதனாலும், அவன் தாழ்மையுடையவனாயிருக்கிறான், தனது சொந்த பலவீனத்தையும் பற்றாக்குறையையும் உணர்ந்து, வலிமையையும் மன்னிப்பையும் கேட்டு இறைவனிடம் இடையறாது வேண்டுதல் செய்கிறான். தனது சொந்த உடல், உணர்ச்சிகள், புலனுணர்வு ஆகியவற்றை மேற் கொள்ள வேண்டி, அவன் புலனடக்கம் உள்ளவனாயிருக்கிறான். ஏனெனில் தன்னுள் ஓர் ஒழுங்கீனம் மறைந்து கிடப்பதையும், இவ்வுலகப் பொருள்களின் கட்டுப்பாடற்ற நுகர்ச்சியால் தான் சோதிக்கப்படுவதையும் அவன் அறிவான். கிறிஸ்துவின் முன்மாதிரியை ஒட்டி கூடுமானவரை ஒரு முழு மனிதன் ஆவதற்கு சதா விழிப்புடனிருக்கின்றான், பேரவாவும், பொறாமையும் தனது செயல்களிலன்றி உணர்வுகளிலேதான் இருந்த போதிலும் அவற்றை எதிர்த்துப் போராடுகிறான். உபவாசத்தையும், மாமிசத் தவிர்ப்பையும் அனுசரிக்கிறான். மேலான அன்பிற்கும் செப வாழ்விற்கும் இட்டுச் செல்லும் தூய ஆவியின் தூண்டுதலை ஏற்க ஆயத்தமாக இருக்கும்படிக்கு எப்போதும் தன்னலமற்றவனாக இருக்க முயல்கிறான்.

35. தனது தனிப்பட்ட வாழ்வில், சிறு காரியங்களிலும் நேர்மையுடையவனாக இருக்கிறான். பெற்றோரை மதித்து, தனது மனைவியை தனக்கு சமமாகப் பாவித்து, பிள்ளைகளைச் சுதந்திரமுள்ள மனிதர்களாக வளர்ப்பதன் மூலம் குடும்பத்தின் புனித சட்டங்களைப் பேணி வருகிறான். ஒரு குடிமகன் என்ற முறையில் ‘‘செசாருக்குரியதை செசாருக்குக் கொடுத்து’’ கிறிஸ்துவின் அறிவுரைப்படி தனது சமூகக் கடமைகளை நிறைவேற்றுகிறான். அவன் வன்முறையைத் தவிர்த்து அனைத்து மக்களுடனும் நட்புறவுடன் வாழ முனைகிறான். பிறரது உரிமைகளுக்கு விசேடமாக அவர்களது மனச்சான்றுக்கு மதிப்பளிக்கிறான்.

36. கிறிஸ்தவன் சோம்பியிருப்பதில்லை. ‘‘உழைக்க மனமில்லாத எவனும் உண்ணலாகாது’’ (2 தெச. 3:10) என புனித சின்னப்பர் கூறியுள்ளார். வேலையை, இறைவனோடு மனிதனது உடனுழைப்பாகவும், தன்னை நிறைவுபடுத்தும் சாதனமாகவும், மனித குலத்திற்குத் தான் பயன்படும் ஒரு [illegible] மூலம் இறைவனின் சித்தத்துக்கமைய படைப்பில் பங்கு கொள்ளுகின்றான். அவனைப் பொறுத்தமட்டில், அவனது தொழில் திறமையும், நாணயமும் அவனது பூரணத்துவத்தின் இன்றியமையா அம்சங்களாகும்.

37. கிறிஸ்தவன் மக்கள் மத்தியில் தனிப்பட்டு வாழ்பவனல்லன். ஒரு மரத்தின் கிளையைப் போலவும், உடலின் உறுப்பைப் போலவும் உயிருள்ள கிறிஸ்தவ சமூகமாகிய திருச்சபையின் ஒரு பாகமாக இருக்கின்றான். ஆகவே, அதன் வாழ்வில் அவன் பகிரங்கமாகப் பங்கு கொள்கின்றான். தனது விசுவாசத்துக்குச் சான்று பகரவும், சக கிறிஸ்தவர்களுடன் தனது கூட்டொருமைப்பாட்டினைப் புலப்படுத்தவும், மகிழ்ச்சிக்கோ, தவத்திற்கோ உரிய விசேட நாட்களாகிய திருநாட்களில் அவன் பங்குபற்றுகிறான். குறிப்பாக, அவன் நற்கருணை வழிபாட்டில் பங்குபற்றுகிறான் – திருப்பலியில் பங்குபற்றும் கடமை அவனுக்குண்டு. இதன் வழியாக முழுத் திருச்சபையுடனும் ஞான வழியாக கிறிஸ்துவின் பலியுடன் தன்னை இணைத்துக் கொள்ளுகிறான். அனைத்து மக்களுடனும் சமாதானமாயிருக்கிறான்.

38. மன்னிப்பும் சமாதானமும் செயலற்ற ஒரு நிலையைக் குறிப்பதில்லை.

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முலிங்கன்

### 13. கூட்டு வாழ்க்கை

1. ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்பது பழமொழியாக, இன்று தனி வாழ்வு முக்கியத்துவம் பெறும். அடிப்படை சமூக அமைப்பு கூட்டு வாழ்வுக்கு இசைவானதாக அமைந்த போதிலும் மேலைமயமாக்க அலைகளிடை இந்த தனி வாழ்வு போட்டிகளிடை எங்கள் கூட்டு வாழ்வும் சிதையும்

அந்த நாட்களில் குடும்ப நிலையிலிருந்து சமூக வாழ்வு வரை கூட்டு வாழ்வின் கனிகளை நாம் சுவைக்க முடிந்தது. விவசாய பொருளாதார உற்பத்தியிலிருந்து ஏனைய கலை, சமயம் சார் பண்பாட்டு நடவடிக்கைகள் வரை இந்த கூட்டு வாழ்வின் இன்றியமையாமை உணரப்பட்டது. உதாரணமாக,

அயல் தோட்ட இறைப்பில், நண்பர்கள், சகோதரங்கள் ஒன்று சேர்வதும், பயிர் நடல் வரை ஒருவர்க்கு ஒருவர் உதவியாதலும் இன்று காசுக்காய் விலை போனது.

முன்பெல்லாம் ஒருவர் வீட்டில் பனம் பாத்தி போட்டால் அந்த குடும்பமே அதன் பலாபலன்களை சேர்ந்து சுகிக்கும் இணைவிருந்தது.

இன்று ...

பாத்தியோடு மொத்தமாக விற்று விட்டு, சொந்தக்காரனும் காசுக்கு இரண்டை வாங்கி கடிக்கின்ற வாழ்வாகும். மாமரம் பழுத்தால், மரத்தோடு விலை போகும் ...

2. கூட்டு வாழ்வின் கனிகளை மீண்டும் நாம் சுவைக்க முடியாதா?

இந்த உலக குடும்ப ஆண்டில் முன்னைய எங்கள் கூட்டு வாழ்வின் மீட்கும் சிந்தனை - செயல் இன்றியமையாத தேவையாக உணரப்படவேண்டும்.

எங்கள் மரபுவழிப் புலங்களில் - கிராமங்களில் இன்றும் கூட்டு வாழ்வின் எச்சங்கள் அதன் பயன்பாட்டினை உணர்த்தி நிற்க காணலாம்.

எடுத்துக்காட்டாக முல்லை மண்ணின் விவசாய புலங்களில் இன்றும் ‘பரத்தை போடுதல்’ கூட்டு விவசாய முயற்சியின் குறியீடாக நிலைத்து நிற்கக் காணலாம்.

இன்றைய எமது சூழல், இவ்வாறான கூட்டு வாழ்வின் அவசியத்தை நிர்ப்பந்திக்கும் நிலையிலேனும் நாம் அதன் முக்கியத்துவத்தினை உணரும் விழிப்பினையடைய வேண்டும்.


தொழினுட்பமும் - மேலை கலாசாரமும் எமது மரபுவழி வாழ்க்கை முறையினை அநாவசியமாக சிதைக்க அனுமதிப்பதனை இனியும் தொடரலாமா? இழந்து போன இந்த வாழ்வுக்காக, அந்த உலகமே இன்று ஏங்கும் நிலைமைகளில், இங்கு வேர் விட்ட எங்கள் பயன் மரபின் கனிகளை நாங்கள் இழந்து போகாமல், மீண்டும் கூட்டு வாழ்வில் கோடி நன்மைகள் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் நினைவுகள்

★ இ. அந்தோனிதாஸ் டலிமா, புனித சவேரியார் குருமடம்.

இயேசு சிலுவையில் தொங்குகின்றார். மீட்பின் திட்டம் முழுமையடையும் இவ்வேளையில் இயேசுவின் எண்ணத்தில் உதித்து அவருடைய வாயினின்று வழிந்தோடிய கனிவான வார்த்தைகள் இயேசுவின் கடைசி வார்த்தைகள்



என கணிப்புச் செய்யப்பட்டுள்ளன. முக்கியமான வாக்கியங்கள் ஏழு வாக்கியங்களாக நிரல்படுத்தப்பட்டுள்ளன. இருந்தும் நற்செய்தியாளர்கள் நால்வரும் ஏழு வசனங்களையும் குறிப்பிட்டுக்காட்டவில்லை. இவற்றுள் மூன்றினை லூக்காசும் (23 : 34, 23 : 43, 23 : 46) மூன்று வசனங்களை அருளப்பரும் (19 : 26 - 27, 19 : 28, 19 : 30) ஒரு வசனத்தை மத்தேயு, மாற்கு இருவரும் (மத். 27: 46, மாற் 15 : 34) எடுத்தாளுகின்றனர்

## போதனை சாதனையாகின்றது லூக். 23: 34

''தந்தையே அவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை'' இயேசுவின் போதனையும் வாழ்வும் ''இரக்கத்தை, மனித மாண்பை'' ஆழப்படுத்துவதாக அமைந்திருந்தது. எதிரிகளை மன்னித்தல் பற்றி யேசு பலமுறை எடுத்துக் கூறியிருக்கின்றார். பழைய ஏற்பாட்டுச் சட்டத்திலுள்ள ''பழிக்குப் பழி'' என்ற கொள்கையை வன்மையாகக் கண்டித்திருக்கின்றார். இப்பொழுது தனது போதனையின் உச்சகட்டமாகச் செயலில் வடித்துக்காட்டுகின்றார். தனக்கு கொடுமை செய்தவர்களை மன்னிக்கின்றார். வெற்று வார்த்தைகள் போதாது, வெற்றி வேண்டுமானால் செயற்பாட்டு வடிவங்களே தேவை என்பதை சிலுவை மரத்திலிருந்தே வடித்துக் காட்டுகின்றார். காலங்களையும், நேரங்களையும், சந்தர்ப்பங்களையும் கடந்து நின்று செயலாற்றுவதுதான் இறை இரக்கம் என்பதை யேசுவின் வார்த்தைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## உண்மைக்கு ஓர் உறுதி லூக். 23: 43

''இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச் சொல்லுகின்றேன்.'' சிலுவையிலே ஒரு மனமாற்றம். இயேசுவின் யதார்த்த நிலையை நிதானித்துக் கொண்டான் கள்வனாகக் கருதப்பட்டு சிலுவையில் இயேசுவோடு தொங்கியஒரு மனிதன். உண்மையை உரைக்கின்றான். தன் மனதினை மாற்றினான்- இயேசு யாரென்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே வான் வீட்டின் நுழைவுப்படியிலே ஏறிக்கொண்டான். ''நீதிமான்களையன்று பாவிகளையே தேடி மீட்க வந்தேன்'' என்ற இயேசுவின் விடுதலைக் கானம் இங்கும் செயல் வடிவமாக ஒலிக்கின்றது.

## புதிய ஏவாள் அரு. 19: 26–27

''அம்மா, இதோ உன் மகன்... இதோ உன் தாய்'' மரியாளின் பங்கு மீட்பின் வரலாற்றில் எத்தகையது என்பதை இயேசு எடுத்துக் கூறுகின்றார். உயிர் வாழ்வோர்க்கெல்லாம் தாயாக்கப்படுகின்றாள் மரியாள். பழைய ஏவாளின் வழியாக நுழைந்த பாவம், புதிய ஏவாள் மரியாளின் பங்களிப்பு ஊடாக வேரறுக்கப்படுகின்றது. புதிய விடுதலை வாழ்வு மலர இறைவனின் அழைப்புக்கு பதிலளித்து பணிபுரிந்த ஒரு சிடத்தி மரியாள். ஆதி. 3:15 இல் காணக்கிடக்கும் ''உன்வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம்'' என்ற உண்மையின் எதிரொலியாக மரியாள் அமைந்திருக்கின்றாள்என்பதை இயேசுவின் வார்த்தைகள் காட்டி நிற்கின்றன.

## தந்தையின் துணைக்காக மத். 27: 46

''என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்.'' இது வேதனையின் வெளிப்பாடுமல்ல, இயலாமையின் தோற்றமுமல்ல. ஆனால் சங். 21இன் ஆரம்ப வசனங்களை எடுத்தாண்டு இயேசு செபிப்பது போல் தோன்றுகின்றது. எது எதுவாக இருந்தாலும் தந்தையின் துணை நிட்சயமாகத் தேவையென்பதை இயேசு நிதானமாகக் கூறுகின்றார். அசையாத இறைநம்பிக்கையின் ஆழத்தை இவ்வார்த்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. தந்தை தன்னோடு இணைந்திருக்கும் நெருக்கமான உறவின் அடிப்படையில்தான் இச்செபம் அமைகின்றது.

## தாகமா... எதற்கு:- அரு. 19: 28

''தாகமாயிருக்கின்றது.'' இது சாதாரணமாக உடலியல் ரீதியில் எழும் தாகத்தைக் குறிக்கவில்லை. ''தந்தை எனக்குக் கொடுத்த துன்பக் கலத்தில் நான் குடிக்காதிருப்பேனோ.'' என்ற இயேசுவின் கூற்றுக்கு அழுத்தமும், உயிரும் கொடுப்பதாக இது அமைகின்றது. தந்தை தந்த பணியை நிறைவேற்றும் ஆவல் தான் தனக்குண்டு என்பதை இயேசு ''தாகமாயிருக்கின்றேன்'' என் பதில் பொதிந்து தருகின்றார்.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

# கல்லறையில் காத்திருத்தல்

## — ஒரு புனித தத்துவம்

செல்வி ஆ. மேரி மஞ்சுரிக்கா, கரவெட்டி.

உலக வரலாற்றின் கல்லறை இது. அதனைச் சுற்றி போர் வீரர்களின் காவல்.

கல்லறையில் காத்திருத்தல் என்பது திடீரென்று விரைந்த கடைசி நேர கற்பனையல்ல. இதன் தாற்பரியத்தை நாம் அறிய மூன்று வருடங்கள் பின்லோக்கிச் செல்லவேண்டும்.

''இந்த தேவாலயத்தை இடித்துப் போடுங்கள். இதனை மூன்று நாட்களில் நான் கட்டியெழுப்புவேன்.'' இயேசு குறிப்பிட்டது அவரது உடலென்னும் ஆலயத்தையே தவிர ஜெருசலேம் தேவாலயத்தை அல்ல!

இந்தக் 'கல்லறைக் கண் விழிப்பு' ஒரு மாபெரும் உண்மையை நமக்கு உணர்த்துகிறது. அதாவது இயேசுவின் எதிரிகள் நம்பினார்கள் அவர் மூன்று நாட்களில் உயிர்த்தெழுவார் என்று. ஆனால் அவரது நண்பர்கள், அவரது சீடர்கள் நம்பவில்லை.

யேசுவின் சீவிய காலத்தில் யேசுவோடு இருந்து அவரை நேசித்த மரிய மதலேன் அதிகாலை கல்லறைக்கு வருகிறாள். புத்துயிர்ப்புப் பெறும் இரட்சகர் யேசுவைக்காண அவள் வரவில்லை... இறந்த ஒரு மனிதஉடலைப் பார்க்கவே அவள் வருகிறாள். யேசுவின் புத்துயிர்ப்பிலே அவளுக்கு சிறிதளவேனும் நம்பிக்கைஇல்லை. கல்லறை வெறுமையாய் கிடக்கிறது. யேசு உயிர்த்து விட்டார் என்ற உண்மையை உணருவதற்குப் பதிலாக அவள் சொல்கிறாள். 'என் ஆண்டவரை அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். அவரை எங்கே வைத்திருக்கிறார்களோ தெரியாது'

யேசு உயிர்த்த அன்று பகல் பொழுதில் அவரது சீடர்கள் சிலர் எம்மாவுஸ் நகருக்கு நடந்துபோய்க் கொண்டிருக்கையில் அவர்களோடு பேசவும் நடந்துபோய்க் கொண்டிருந்தார். ஆனால்அவர்கள் அவரை அறியவில்லை. அவர் தன்னை யார் என்று காட்டிக் கொள்ளாமல் அவர்களிடம் ''நீங்கள் ஏன் மிகவும் வாட்டமாய் இருக்கிறீர்கள்'' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் பெண்கள் கல்லறைக்குச் சென்றதையும், கல்லறை வெறுமையாய் இருப்பதைக்கண்டு அவர்கள் விசும்பி அழத் தொடங்கியதையும், ஒரு தேவதூதன் யேசு உயிர்த்து விட்டார் என்று கூறியதையும் ஆனால் அவர்கள் அதனை நம்பவில்லை என்பதையும் அவரிடம் முறையிட்டார்கள். யேசு சகலதையும் கேட்டு மௌனமானார். ஆனால் சீடர்கள் கூறிய கடைசி வார்த்தைகள் அவர்களது நம்பிக்கையை தெட்டத் தெளிவாக உணர்த்தியது. ''ஆனால் அந்த மனிதன் இஸ்ராயேலை மீட்டெடுப்பார் என்கிற நம்பிக்கை எமக்கு உண்டு.''

இயேசு அவர்களிடையே இருந்து பிரிந்து போனார்.

அவருடைய சீடர்கள் அவரின் புத்துயிர்ப்பை அந்த பெண்களின் வாயிலாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அதனை நம்பவில்லை. ஏனெனில் அது கட்டுக்கதை என அவர்கள் நினைத்தார்கள். பெண்களின் மூலம் கிடைத்த வாக்கு மூலத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள்.

மரியமதலேன் இயேசுவின் புத்துயிர்ப்பை ஏன் எதிர்பார்க்கவில்லை? வெறுமையான கல்லறையைக் கண்டு அவள் ஏன் விம்மி அழவேண்டும்?

தேவதூதர்கள் அந்த புத்துயிர்ப்பின் செய்தியை, மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு அறிவித்ததை மரியமதலேன் ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால் அந்த சிறிது நேர மௌனத்தின் பின் யேசு அவளருகே தோன்றினார். அவர் யேசு என்று அவரை அடையாளம் காணவில்லை. ''பெண்ணே! ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? யாரைத் தேடுகிறாய்''? அவள் அவரை அரிமத்தியா சூசை என்பவரின் தோட்டக் காவல்காரன் என்றெண்ணி, 'அவரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று நீர் அறிவீரா! நான் அவரை எடுத்துச் செல்லவேண்டும்'' என்று கேட்டாள்.

மரியமதலேன் தனது பக்தி வணக்கத்துக்குரிய, நேசத்துக்குரிய கண்ணீரை அவரது கல்லறையில், கொட்ட வேண்டுமென்று எண்ணினாளேயொழிய யேசு, மரணத்திலிருந்து எழுந்து வெற்றிநடைபோடுவாரென்று நம்பவில்லை. அந்த அவளுடைய நம்பிக்கையில்தான் ஈஸ்டரின் தனித்துவம் புலனாகிறது. இறப்பிலிருந்து எழும் புத்துயிர்ப்பும், தோல்வியிலிருந்து எழும் வெற்றிக்களிப்பும், இழப்பிலிருந்து எழும் தேடலும் இயேசுவின் புத்துயிர்ப்புக்கு புதுப் பொலிவை ஏற்படுத்துகின்றன.

யேசுவின் பிறப்பு முதன் முதலில் தேவதூதன் மூலம் கன்னிமரியாளுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாவமாசு அணுகாத ஒரு கன்னிப் பெண்ணிற்கு யேசுவின் பிறப்பும், பாவச்சேற்றில் மூழ்கிக் கிடந்த மரியமதலேனுக்கு யேசுவின் புத்துயிர்ப்பும் அறிவிக்கப்பட்டதன் தத்துவம் யேசுவின் வருகை ஒரு புனிதத்தின் மூலமே புறப்பட வேண்டுமென்றும் அவரது புத்துயிர்ப்பு, பாவக் கல்லறையிலிருந்து புத்துயிர்ப்புப் பெற்ற மரியமதலேன் மூலமே வெளிப்பட வேண்டும் என்ற ஒரு புதிய பார்வையில் வெளிப்படுத்துகின்றார்.

யேசு தன்னுடன் மூன்று வருடகாலமும் இணைந்திருந்திருந்த சீடர்களை மறக்கவில்லை. தன்னுடைய புத்துயிர்ப்பை அவர்கள் எதிர்பார்க்காவிட்டாலும் அவர்களை அவர் சந்திக்கவே விரும்பினார். திடீரென்று, அமைதியாக நிழல்கள் தோற்றுவிக்கப்படாமல், ஓசையின்றி, காலடி ஓசைகளின் எதிரொலியில்லாமல் யேசு தமது சீடர்களின் முன் தோன்றினார்.

''நீங்கள் ஏன் அச்சமுறுகிறீர்கள்? உங்களுடைய இதயங்களில் தேவையற்ற ஊகங்கள் எப்போது உண்டாகியது? என்னுடைய கால்களையும் கைகளையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள். அப்போதுதான் உங்கள் ஐயம் நீங்கும், நான் உயிர்த்தெழுந்து விட்டேன் என்கிற உண்மையை நீங்கள் ஏன் இன்னும் உணரவில்லை.''

யேசுவின் சீடர்கள் தங்களை தைரியப் படுத்திக் கொண்டார்கள். இடித்துப் போடப்பட்ட தேவாலயம் மூன்று நாட்களில் உருவாகிய விந்தையை அவர்கள் வியந்து கொண்டார்கள்.

ஆலயத்தின் மூலைக்கல்லாக யேசுவும், அதிலிருந்து உருவாகும் சிறு கற்களாக அன்பின் அடையாளங்களாக நாமும் உருவாகவேண்டும் என்பதே இந்த ஈஸ்டர் திருநாளின் உயர்ந்த தத்துவம் ஆகும்.



## கல்லறையே... கதை சொல்லு!

கர்த்தரை ஏற்ற
கல்லறையே
கதை சொல்லு...
மனிதனின் மனத்திலே
மறைந்திருந்த கள்ளங்களை
மன்னன் இயேசு
மரித்த பின்னர்
மறைக்காமல் உன்னிடம்
சொன்னாரா?
சிலுவைச் சாவிற்கு - அவர்
சிந்திய குருதி
எதற்கு என்று
சிரித்தபடி சொன்னாரா?
இறந்த அவர் உடலுக்கு
திறந்த மனம் கொண்ட
நீ
சிறந்த இடம் கொடுத்து
என்ன தான் கேட்டாய்?
கல்லறையே!
சில்லறைக் காசிற்காய்
நல்லறம் புரிந்த
கிறிஸ்துவை கொன்று
போட்டேன்.
அவர் எங்கே?
உயிர்த்துவிட்டாரா?
உனக்குத்தானே தெரியும் —
அவர்
உயிர்ப்பின் இரகசியம்
உன்னைக் கெஞ்சுகிறேன்
உயிர்ப்பின் கதையை
கெஞ்சும் இந்த பாவி
நெஞ்சில் பதித்திட சொல்லு...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீயின் தெய்வீக சக்தி

இறைவனின் பெரும் படைப்புக்களான தீ, நீர், நிலம், காற்று, ஆகாயம் என் பன ஆக்கவும் அழிக்கவும் கூடிய சக்திகளாக மிளிர்வதை நாம் காண்கிறோம். எரித்தல் வெள்ளம், பூமி அதிர்ச்சி, புயல், மின்னல் அழிவுகள் கண் கூடு இயற்கைப் படைப்புக்கள் எப்படி ஆக்கவும் அழிக்கவும் செயலாற்றுகிறதோ, அதேபோல் செயற்கைக் கண்டுபிடிப்புக்களும் ஆக்கவும் அழிக்கவும் கூடியவை. ஆதிகாலம் தொடக்கம் மக்கள் ஆக்கும் அழிக்கும் சக்திகளை; இறை அருள் என்றும் இறை சாபம் என்றும் நம்பி வந்தனர். அதே கோட்பாட்டில் மனித வர்க்கம் வாழ்வதை இன்றும் காணலாம்.

புனித கிரகோரியாரின் கூற்றுப்படி ''இறைவனின் இதயத்தைக் காணும் நூல்'' என வர்ணிக்கப்பட்ட வேதாகமத்திலும் இறை பிரசன்னமானது தீயின் வெளிப்பாடாக பல இடங்களில் அமைவதைக்காண்கிறோம், தீயில் நின்று புறப்படும் ஒளியை இருளில் நின்று பிரித்தார் (ஆதி 1 : 3 – 5). மீட்பின் திட்டத்தின் போது பகலில் மேகத் தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் வழிநடத்தினார் (யாத் 13:21) சீனாமலையில் நெருப்பில் இறங்குகிறார் (யா. 19 : 18). மோயீசனுக்கு எரியும் முட் செடியில் காட்சி கொடுக்கிறார் (யா. 3 : 2). சாலமோனின் ஆலய அபிஷேகத்தின் போது, தீயானது பலிகளைப் பட்சித்துச் செல்கின்றது (நாள். 7 : 1). எலியாசின் நீர் ஊற்றிய பலியை தீயானது சுட்டெரிக்கின்றது. இது மாத்திரமன்று புதிய ஏற்பாட்டிலும்; யேசு பிறந்தபின் ஞானிகள் விண்மீனின் ஒளியைக் கண்டு வருகைதந்தார்கள் (மத். 2:2). யேசு - மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன் (லூ. 12 : 49). அப்போஸ்தலர் மேல் அக்கினி நாக்குருவில் தூய ஆவி இறங்குகிறார் (அப். 2 : 3 - 4). சவுல் முன் வானில் நின்று தோன்றிய ஒளி (அப். 9 . 3). அழிவின் போது சோதோம், கொமோரா தீயால் அழிதல் (ஆதி. 20 : 28). தீயைப் போல் அவர் கோபம் கொட்டுகிறது (நாகும். 1:6). எகிப்தும் இஸ்ரேயலும் துன்புறுத்தப்பட்டுத் தீயால் எரிக்கப்பட்டன (ஞா. 16 : 16). இப்படியாகப் பல இடங்களில் தீயின் வெளிப்பாடுகள் வெளிக்கொணரப்படுகின்றன. ஒட்டுமொத்தத்தில் தீயானது இறை பிரசன்னத்தையே உணர்த்தி நிற்கிறது. மனிதனும் தீக்குப் பயந்தான். அத்தீச்சுடரில் மிருகங்களைச் சுட்டெரித்தும் தூபம் காட்டியும் இறைவனுக்கு பல வகையான பலிகளையும் ஒப்புக்கொடுத்தார்கள்.

தமிழ் மக்களாகிய நாமும் விழாக்களில் தீபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். திருவருட் சாதனங்களின் போதும் எமது திருச்சபை தீச்சுடருக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காண்கிறோம்

''மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன். இப்போதே அது பற்றியெரிய வேண்டு மென்று எவ்வளவோ விரும்புகின்றேன்'' யேசுவின் இச்செய்தியானது மனித சமுதாயம் நீதி, நேர்மை, சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதில் ஒவ்வொருவரும் 'தீ' யாகச்செயல்பட வேண்டும் என்னும் ஏக்கமாக, தாகமாக இருக்கிறார் என்பதையே உறுதிப்படுத்துகிறது.

பொது நிலையினர் எல்லோரும் ஞானஸ்நானத்தினால் இறை பணிச்கு அழைக்கப்பட்டவர்களாகிறோம். தீயானது எப்படி தன்னைத் தொடும் பொருளை தன்வயப்படுத்தி இறைவனுக்கு உகந்ததாக பட்சித்துப் புனிதப்படுத்துவது போல், ஞானஸ்நானம் பெற்ற எல்லோரும் தன்னைப் புதுப்பித்து, பணியைப் பகிர்ந்து, திருச்சபைப் பொது நிலையினராக மாற வேண்டும். அப்பொழுது யேசு அருளிய முழு உலக சமாதானம், நீதி, நேர்மை, மனித மாண்புடன் உலகில் மிளிரும் என்பதில் சந்தேகமில்லை.

புதுவுலகின் விடிவெள்ளி நாமாகலாம். இறையரசின் கனவுகளை நனவாக்கலாம். இதயத்தை சுடராய்ஏற்றிடுவோம். உலகெங்கும் புத்தொளியால் மாற்றிடுவோம்.

திருமதி
கெலன் பெர்னாண்டோ
பாஷையூர்

# உயிரூட்டும் உயிர்ப்பு விழா!

இறைமகன் கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா என்பது ஆண்டாண்டு காலமாக மனுக்குலம் காணத்துடித்த விடுதலைப் பெருவிழா. ஒளியாகிய இறைவன் மனித உரு எடுத்த மானிடர் நம்மை ஒளியின் பாதையில் இட்டுச் சென்ற விழா பாவப் பிடியில் கட்டுண்டு அல்லற்பட்ட மானிடர் நமது பாவக் கட்டை உடைத்த விழா. அறியாமையால் அநியாயத் தீர்ப்பிடும் எமக்கு ஆவியின் ஒளியை ஏற்றியவிழா. சட்டங்களும் சம்பிரதாயமுமே முக்கியம் என வாழ்ந்து மனித மாண்புகளைப் போலிப் போக்குகளுக்காக அடிபணிய வைத்த அனைவருக்கும் மனிதத் தன்மைகளும் மனித மதிப்பீடுகளுமே முக்கியம் என உணர்த்திய உன்னத விழா இறைமகன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா.

உயிர்ப்பு விழாவுக்கு வெளி ஆடம்பரம் முக்கியமானதல்ல. மாறாக உயிர்ப்பு விழா தரும் செய்தியும் அதனால் கிடைக்கும் வழி நடத்துதலும் தான் முக்கியம் என்பதையுணர்ந்து, எம் உள்ளத்தில் உள்ள அடிமைத்தனங்களிருந்து உயிர்க்கும் கிறிஸ்துவுடன் நாமும் புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழுந்தால் மட்டுமே இவ் விழாவின் பயன் கிடைக்கும்.

மரணம் என்பது வாழ்க்கையிலே பயங்கரமான, கவலைக்கிடமான மாற்று வழி காண முடியாத நிகழ்வு ஆகும். அதை எவராலும் தட்டிக் கழிக்க முடியாது. மானிடர் அனைவரும் மரணத்திற்குள் செல்லவும், இறுதித் தீர்ப்பின் பலாபலனைக் கண்டடையவும் வேண்டுமென்பது இறைவனின் நியதி. எனவே மரணந்தான் வாழ்வின் முடிவு என்று எண்ணிவிட்டால் எம் விசுவாசம் எல்லாம் வீண். இதன் பொருட்டுத் தான் கிறிஸ்துவின் உத்தானம் கிறிஸ்தவத்தின் அடிப்படை. உண்மையும் அடிக்கல்லுமாகும். கிறிஸ்து சாவை வென்ற சத்தியனாக மூன்றாம் நாள் உயிர்த்தெழவில்லையென்றால் இன்று கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் இருந்திருக்க முடியாது. எனவேதான் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறு உலக நம்பிக்கை கொண்டிருக்கின்றான். இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் வரவிருக்கும் நித்திய வாழ்வுதான் நம்பிக்கையையும், மனத்திடனையும் அளிக்கின்றது. கிறிஸ்துவும் வரவிருக்கும் இவ் வாழ்வையே போதித்தார். தம் உத்தானத்தையே எம் நம்பிக்கையாக்கி இந் நம்பிக்கையின்படி வாழ அழைத்தார்.

எனவே பொருள் உணர்ந்த கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்வோம். கருத்தை உணர்ந்த உயிர்ப்பைக் கண்டடைவோம். எம் வாழ்வில் இறைவனின் இனிய பிரதிநிதிகளாகத் திகழ்ந்து காட்டுவோம். ''உயிர்ப்பும் உயிரும்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு - 79

**அடைக்கலம் :** இந்தத் தபசு காலத்திலையும் கண் எதிரில எத்தனை அழிவுகள் நடக்குது. இதுகளை உணராம இரவிரவா படம் பார்த்து கொண்டாடிறதிலதான் எங்கட சனம் நேரத்தப் போக்கு தண்ணே, பாத்தியளோ?

**குருசு :** தம்பி எதையும் சட்டம் போட்டுத் திருத்திறது எண்டா பயத்தில செய்கிறமாதிரித்தான் இருக்கும். எதையும் நாங்களா உணர்ந்து திருந்த வேணும். வழியை சொல்லிக் கொடுக்கிறதை விட எனக்கென்ன போச்சு எண்டு அயலவையளும் இருந்திட்டா அவையளும் அழிவுகளுக்கு துணைபோறதுக்கு சமன்தான் தம்பி.

பரிசுத்த தந்தையின் தவக்காலச் செய்தியின் தொகுப்பு:-

# குடும்பம் ஒரு புளிக்காரம்



மனமாற்றம் எனும் புதிய பயணத்தை மேற்கொண்டு விசுவாசம், நம்பிக்கை, அன்பினால் வளரவும், இறைவனோடு உண்டான உடன்படிக்கையில் முழுமையாக இணைந்து, அருளையும் ஒப்புரவையும, அனுபவிக்கும் பாலமாக இத்தபக்காலம் இருக்கிறது. எல்லாக் கிறிஸ்தவர்களும், தங்கள் வாழ்வையும் வாழ்க்கை முறைகளையும் மாற்றியமைத்து மனித குடும்பத்தின் இதயத்தில் அன்பும், ஐக்கியமும் சுரக்கும் புளிக்காரமாக இருக்க அழைக்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, குடும்பங்கள் திருச்சபையிலும் உலகத்திலும் ஆற்ற வேண்டிய பணிகள் மட்டில் கூடிய விழிப்புணர்வுகொண்டதாய் இருக்க அவற்றை நான் உற்சாகப்படுத்துகிறேன். அன்பு, ஒற்றுமை, சகோதரத்துவ வாழ்வை பெருமிதப்படுத்தி வாழும் முதலிடம் குடும்பமே. அங்கே திறந்த உள்ளத்துடனும், நல்நோக்குடனும் மற்றவர்களை மதிக்கப் பழகுகிறோம். இன்னல் நிறைந்த இக்காலத்திலே, தன்னுடைய பந்துவான எலிசபேத்திற்கு உதவி புரியச் சென்ற மரியாளின் எடுத்துக் காட்டைப்பின்பற்றி, குடும்பங்கள் உதவியைவேண்டி நிற்கும் சகோதர சகோதரிகளை தேடிச் செல்லவேண்டும். வறுமை எங்கும் பரவி, இன்னலுறும் மக்களின் தொகையைப் பெருக்கி, அவர்களின் மனித மாண்பை அழிக்கிறது மாத்திரமல்ல, ஒட்டுமொத்தமாக மனிதத்துவத்தையே இழிவுபடுத்துகின்றது

இன்று நாம் குடும்பங்களில் நிலவும் வறுமையையும் துன்ப துரிதங்களையும் மனதில் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அநேக குடும்பங்கள் வறுமையின் எல்லைக் கோட்டைக் கடந்து வாழ்வின் அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் இல்லாமல் அவலப்படுகின்றனர். இளைஞர் வேலை வாய்ப்பு, கல்வி கற்றல் இன்றி போதைவஸ்து, வன்செயல்களில் நாட்டம் கொண்டு வாழ்கின்றனர். தம்பதிகள் உள உறவுச் சிக்கல்களைக் கூடுதலாகச் சந்திக்கின்றனர். வயோதிகர் கவனிப்பாரின்றி விடப்பட்டுள்ளனர். இவையெல்லாம் குடும்பங்களைப் பாதிக்கும் இன்னல்கள்.

கிறிஸ்தவர்களும், நல்மனம் படைத்த மக்கள் எல்லோரும் இன்னலுறும் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டி, ஆன்ம, சரீர உரமூட்டி விசுவாச அடிப்படையில் பகிர்ந்து வாழும் சமூகமாக வாழ அவர்களை அழைக்கின்றோம்.

# சிலுவையின் ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

## முழுமையின் தோற்றம் அரு. 10 : 30

''எல்லாம் நிறைவேறிற்று'' தந்தை எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றிவிட்டேன். தீமையின் ஆற்றல் ஒடிக்கப்பட்டுவிட்டது. நன்மை தழைக்கின்றது. உண்மைக்காக நீதிக்காக என்னை அர்ப்பணமாக்குவதே எனது பணி. இப்பொழுது அது நிறைவேறிவிட்டது என்ற இயேசுவின் உள்ளக்கிடக்கை இங்கு உருமறைந்து நிற்கின்றது. இது சாவுடன் கூடிய முடிவல்ல. புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்.

## தந்தையின் அணைப்பில் லூக். 23 : 46

''தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்.'' தான் தனித்து நின்று செயலாற்றவில்லை. தந்தை கொடுத்த உறுதியிலும், ஆற்றலிலும் நின்றே செயற்படுகின்றார். வல்லமை தமக்குரியதல்ல தந்தையிடமிருந்தே வந்தது. தான் ஒன்றுமில்லை தந்தையே செயலாற்றுபவர் என்று தன்னைத் தாழ்த்தித் தன் சுதந்திரம், தன் ஆற்றல், சக்தி அனைத்தும் தந்தையினுடையதே என்பதை அழுத்தமாகக் கூறுகின்றார். தன்னை முழுமையாகத் தந்தையிடம் ஒப்படைக்கின்றார். நீரே என்னைத் தெரிந்தெடுத்து அனுப்பினீர். மீண்டும் உம்மிடமே வருகின்றேன் என்று கூறுவது போல் தோன்றுகின்றது.

## முடிவாக:

இந்த ஏழு வார்த்தைகளும் வெறும் நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தவில்லை. இயேசுவிடம் காணப்பட்ட கொள்கைப்பிடிப்பின் இறுக்கத்தையும், அர்ப்பண வாழ்வின் ஆழத்தையும், யதார்த்த நிலைகளையும் இனம் காட்டி நிற்கின்றன. ''இறைவெளிப்பாட்டின் மையம் பெத்லேகேமல்ல, கல்வாரிதான்'' - இயேசு விரும்பிய சாவு இயற்கை நியதிகளுக்குட்பட்ட வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்ப வருவித்துக் கொண்ட தியாக மரணம் என்ற மெய்மைகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

கல்வாரி நிகழ்வு
கனவுகளுக்கு கட்டப்பட்ட கல்லறையுமல்ல
கொள்கைகளுக்கு இடப்பட்ட மரணமுமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாடு தந்த மனப்பதிவுகள்

★ தமிழ்நேசன்

''அனைத்துலக மக்களே! நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு கதவைத் திறந்து விடுங்கள்'' என்ற எம் இன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் அறைகூவலுக்கு பதில் அளிக்கும் வகையில் தேசிய அளவிலும், மறைமாவட்ட அளவிலும் மேய்ப்புப்பணி மாநாடுகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த வகையில் யாழ் ஆயர் மேன்மை தங்கிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டைக் கூட்ட அழைப்பு விடுத்திருந்தார். பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆயத்தங்களின் பின் இவ்வாண்டு மார்ச் 8 முதல் 14 வரை புனித பத்திரிசியார் கல்லூரியில் இம் மாநாடு இடம்பெற்றது. பங்குக் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர், பொது நிலையினர் என நாளாந்தம் 262 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கெடுத்தனர். இம் மாநாட்டில் நான் பார்வையாளனாக கலந்து கொண்டேன். இம்மாநாடு எனக்குத் தந்த மனப்பதிவுகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

## வரலாற்று நிகழ்வு

யாழ் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலேயே நடந்து முடிந்த மேய்ப்புப்பணி மாநாடு முதலாவதும் முக்கியமானதுமாகும். பல ஆண்டு கால சமூகமான பயணத்தின் பின் யாழ் திருச்சபை ஓர் வரலாற்றுத் திருப்பு முனையை இம்மாநாட்டில் சந்தித்தது. யாழ் திருச்சபையின் சரித்திர ஏடுகள் இதை ஓர் முக்கிய வரலாற்று நிகழ்வாக பொறித்து வைத்துள்ளன. எவ்வாறு உலகத் திருச்சபையில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் இன்று வரை முதன்மைப்படுத்தப்பட்டு பேசப்படுகிறதோ, அதே போல் எமது தமிழ் மண்ணிலும் இந்த மேய்ப்புப்பணி மாநாடு பல தசாப்தங்களுக்கு முதன்மைப் படுத்தப்பட்டு பேசப்படும். பல இறையியல் மறையியல் ஆக்கங்களுக்கு ஆய்வுகளுக்கு, உரைகளுக்கு இம் மாநாட்டு ஏடுகவில் இருந்து மேற்கோள்கள் காட்டப்படப் போகின்றன. யாழ் கத்தோலிக்க திருச்சபையின் வாலாற்றிலேயே முதல் தடவையாக யாழ் திருச்சபை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது இந்த மாநாட்டிலே தான். ஆகவே இது ஓர் வரலாற்று நிகழ்வு.

## ஆவியின் நிகழ்வு

திருச்சபைக்குள் இருந்து அதை வழிநடத்தி வரும் தூய ஆவியானவர், காலத்திற்குக் காலம் பலபுதிய மாற்றங்களை திருச்சபையில் ஏற்படுத்தி வருகின்றார். சாதாரண மனிதர்களைக் கொண்டே அசாதாரண சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார். ஆவியினால் ஏவப்பட்டே அன்றைய திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை கூட்டினார். 'இந்த நூற்றாண்டின் பெந்தகேஸ்தே' என அழைக்கப்படும் இச் சங்கம் முற்று முழுதாக ஆவியின் செயற்பாட்டினால் இடம் பெற்ற ஒரு நிகழ்வு ஆகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் செயலாற்றிய அதே ஆவிதான் யாழ் மேய்ப்புப் பணி மாநாட்டிலும் செயலாற்றினார். மாநாடு இடம் பெற்ற ஐந்து நாட்களும் வழிபாடும் ஆராதனையும் கலந்த தியான நாட்களாகவே அமைந்திருந்தன. மனித முயற்சிகளோ, அறிவோ, திறமைகளோ, இங்கு முதன்மைப் படுத்தப்படவில்லை. மாறாக தூய ஆவியின் வழிகாட்டலும், செயல்பாடுமே முதன்மைப்படுத்தப்பட்டது. இங்கே தூய ஆவியானவர் பிரசன்னமாயிருந்தார். வழி நடத்தினார். பலர் வழியாகப் பேசினார். மாநாட்டின் இறுதி நாள் அன்று மதிப்புரை வழங்கிய மன்னார் ஆயர் மேன்மை தங்கிய இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்கள் ''இம் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்த பெந்தகோஸ்தே'' எனக் குறிப்பிட்டார். இம் மாநாடு ஓர் ஆவியின் நிகழ்வு என்பதற்கு ஆயரவர்களின் இக்கூற்று அத்தாட்சியாக அமைகிறது.

## புதுப்பித்தலின் நிகழ்வு

நமது கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் இது வரை 21 பொதுச் சங்கங்கள் இடம்பெற்றன. இவற்றுள் இறுதியாக நடந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் தனித்துவமானது. காரணம் அனேகமாக எல்லாப் பொதுச் சங்கங்களும் திருச்சபையின் விசுவாச உண்மைகளை வரையறுக்கவோ அல்லது தப்பறைகளை (பேதகங்களை) கண்டிக்கவோ தான் கூட்டப்பட்டன. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கமோ திருச்சபையின் ''புதுப்பித்தலை'' மையமாகக் கொண்டே கூட்டப்பட்டது. இதுவே இச் சங்கத்திற்குரிய தனித்துவமாகும். நமது அன்னையாம் திருச்சபை, பரிசுத்த திருச்சபையாக இருப்பினும் அது பாவிகளையும் பலவீனர்களையும் பங்காளிகளாகக் கொண்டது. ஆகவே மீண்டும் மீண்டும் இது புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது. இது யாழ் திருச்சபைக்கும் முற்றிலும் பொருந்தும். யாழ் திருச்சபையின் கொள்கைகள் நடை முறைகள், சடங்குகள் சம்பிரதாயங்கள், மரபுகள் மட்டுமல்ல மக்களின் மனங்களும் புதுப்பிக்கப்பட வேண்டும். இது இன்றைய அவசரமான, அடிப்படையான தேவை. இத் தேவையின் நிறைவாகவே ''புதுப்பிந்துப் பகிரும் திருச்சபையாக'' மாறும்படி இம் மாநாடு அழைப்பு விடுத்து நின்றது. ஆகவே, இது ஓர் புதுப்பித்தலின் நிகழ்வு.

## எமது இருப்பின் தன்மையை எண்ணிப்பார்க்க வைத்த நிகழ்வு

நாம் யார்? எமது அழைப்புப் பணி என்ன? நாம் எப்படிப்பட்ட மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? எப்படியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? என்பன போன்ற வினாக்களை எழுப்பி சிந்திக்க இம்மாநாடு ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைந்தது. திருநிலையினர் ஆனாலும் சரி பொது நிலையினர் ஆனாலும்சரி எமது அழைத்தல் வாழ்வு, எமது கிறிஸ்தவ வாழ்வு எப்படி இருக்கின்றது என்று ஆராய ஆய்வு செய்ய இம்மாநாடு வழிகோலியது. இதனை இம் மாநாட்டின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகக் கருதமுடியும் நாம் யார் என்றோ, எமது அழைப்பு பணி என்ன என்றோ அறியாமல், தெரியாமல் காலத்தின் ஓட்டத்தில் தம்மையும் இணைத்து ஓடிக் கொண்டிருந்த திருநிலையினரும், பொதுநிலையினரும் தமது ஓட்டத்தை நிறுத்தி இந்த மண்ணிலே, இந்த காலகட்டத்திலே எமது இருப்பின் தன்மை எப்படிப்பட்டது என்பதை எண்ணிப்பார்க்க வைத்தது இந்நிகழ்வு.

## புதிய தரிசனப் பார்வையை புகுத்திய நிகழ்வு

பல காலங்களாக யாழ் திருச்சபை இம் மண்ணின் நிகழ்வுகள் மட்டில் ஒருவித 'அன்னிய மனப்பான்மை' யுடனேயே இருந்து வந்துள்ளது. ஆனால் தன்னுடைய இருப்பின் தன்மையை, அழைப்பின் மேன்மையை உணர்ந்த யாழ் திருச்சபை இம்மாநாட்டில் ஒரு புதிய தரிசனப் பார்வையை தன்னுள் புகுத்திக் கொண்டது. அருட்தந்தை எஸ். ஜே. இம்மனுவேல் அடிகளாரின் கூற்று இதற்கு சான்றாக அமைகிறது. ''எமது தலத் திருச்சபை இம்மண்ணிற்கும் மக்களுக்கும் புறம்பே அல்ல. இம்மண்ணில் உள்ள அத்தனை மெய்மைகளுக்கும் புத்துயிர் அளிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறது. எமக்கு அளிக்கப்பட்ட இறைவார்த்தை, இறையனுபவம், திருவருட்சாதனங்கள், குழும வாழ்வு அத்தனையும் இம்மெய்மைகளின் மீட்புக்காக, புதுப்பித்தலுக்காக பகிரப்படவேண்டுமென்பதே எமது புதிய நோக்கும் பணியுமாக அமைய வேண்டும் இன்றைய மண்ணின் வேதனைகளை, சோகக் கதைகளை, உள்வாங்கி காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப தன் பயணத்தை தொடர, தான் செல்லப் போகும் பாதையின் திசையை இலக்கை அடையாளம் கண்டு கொள்ள இம்மாநாடு உதவியது. யாழ். திருச்சபையிலே ஒரு புதிய தரிசனப்பார்வையை புகுத்திய நிகழ்வாக இம் மாநாடு அமைந்தது.

## கருத்துப் பரிமாற்றங்களுக்கு களம் அமைத்த நிகழ்வு

திருச்சபையில் அக்கறையுள்ளவர்கள், பற்றுக்கொண்டவர்கள் அனைவருமே யாழ் திருச்சபை புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும், தேவையற்றவைகளையப்பட்டு தேவையானவை சேர்க்கப்பட வேண்டும் என்றும் விரும்பினர். யாழ். திருச்சபை காலத்தின் அறிகுறிகளைப் புரிந்து கொண்டு, புதிய அணுகுமுறையை, புதிய மாற்றங்களை தன்னுள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசையும் ஆவலும் கொண்டிருந்தனர். காலாகாலமாக தமது உள்ளத்திலே அடக்கிவைக்கப்பட்ட இத்தகைய ஆசையை, ஆவலை, விருப்பத்தை, கருத்துகளை பகிர்ந்துகொள்ள இம்மாநாடு அனைவருக்கும் ஓர் களம் அமைத்துக்கொடுத்தது. பொது அமர்வுகளிலும் சரி, பட்டறைகளிலும் (Work Shops) சரி ஏராளமான பொது நிலையினரும் தம் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தினார்கள். தம் மன ஆதங்கங்களை பகிர்ந்து கொண்டார்கள். இம் மாநாட்டில் பல்வேறு விடயங்கள் பற்றியும் பலதரப்பட்ட சார்பான, எதிரான, முரணான கருத்துக்கள் பல திசைகளிலும் இருந்து ஒலித்தன. ஆகவே இம் மாநாடு கருத்துப்பரிமாறல்களுக்கு களம் அமைத்த அரிய நிகழ்வாக அமைந்திருந்தது.

## அமைப்பு மாற்றங்களுக்கு அடிகோலிய நிகழ்வு

''ஆவியின் உந்து சக்தியுடன் இறைவனை நோக்கியும் அயலவனை நோக்கியும் மனம் திருப்புவதே இந்நிகழ்வின் உயர்ந்த இலட்சியமாக'' இருந்தது. அதேவேளையில் இந்த உள்ளார்ந்த மாற்றங்களோடு இணைந்து பல வெளி அமைப்பு மாற்றங்கள் ஏற்படவும் இம்மாநாடு வழிவகுத்தது. வளர்ச்சி வேண்டுமென்றால் அங்கே மாற்றங்களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் மாற்றம் இன்றி வளர்ச்சி இல்லை. அவசியமற்ற, தேவையற்ற பழமைகளை களைந்து விடவும், அவசியமான தேவையான புதுமைகளை ஏற்றுக் கொள்ளவும், தேவையேற்பட்டபோது திருச்சபையின் அமைப்புக்களில் மாற்றங்களைக் கொண்டுவரவும் இம்மாநாடு பின்னிற்கவில்லை. ஏற்கனவே உள்ள அமைப்புக்களை, நிறுவனங்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்திய அதேவேளையில் தேக்க நிலையில், சோர்வுற்ற நிலையில் இருக்கும் அமைப்புக்கள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது அத்துடன் அடிப்படைக் கிறிஸ்தவ குழுமங்கள், ஆலய மேய்ப்புப் பணிச் சபை, பங்கு மேய்ப்புப் பணிச் சபை மற்றும் பல்வேறுபட்ட துணைக் குழுக்கள் என்றவாறாக பலவித அமைப்பு மாற்றங்களுக்கும் இந்நிகழ்வு அடிகோலியது.

## அதிருப்திகள் சிலவற்றையும் அடையாளம் காட்டிய நிகழ்வு

இந்த மேய்ப்புப்பணி மாநாடு மிகுந்த சிரமங்கள், மத்தியில் பலகால ஆயத்தங்களுடன் காட்டப்பட்ட ஒரு நிகழ்வு. பலருடைய நேரங்கள், ஆற்றல்கள், சக்திகள், நெற்றி வியர்வைகள் என்பன இம் மாநாட்டின் வெற்றிக்கு வழி வகுத்தன. அதேவேளையில் மாநாட்டு மண்டபத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மாநாடு பற்றிய சில அதிருப்திகளும் எதிரொலிக்கவே செய்தன. இந்த அதிருப்தியின் வெளிப்பாடாக மாநாட்டைப் பற்றி விமர்சிக்க நேரம் தரும்படி அனுமதி கோரி சபையில் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

நாம் தூய ஆவியினால் வழி நடத்தப்பட்டாலும் மனிதர்கள் என்ற ரீதியில் எமது பலவீனங்கள், குறைபாடுகள் எம்மைத் தொடரவே செய்யும். இக்குறைபாடுகள், பலவீனங்களை விமர்சிப்பதும் ஆரோக்கியமானதே. அது எமது வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மாநாடு பற்றிய அதிருப்திகள், எந்தவிதத்திலும் மாநாட்டின் வெற்றியை அல்லது அதன் புனித நோக்கை பாதிக்கவில்லை. இறுதி நாள் அன்று மதிப்புரை வழங்கிய திருமலை மட்டுநகர் மறைமாவட்டப் பிரதிநிதியாகிய அருட்தந்தை ஜோசப் மேரி அவர்கள் தனது உரையில் ''அதிருப்திகள், முரண்பாடுகள், பிரச்சினைகள் என்பவற்றை மாநாட்டின் ஓர் அங்கமாகவே கணிக்கவேண்டும். எந்தவித பிரச்சினைகளும் முரண்பாடுகளும் இன்றி இந்த மாநாடு முடிந்திருந்தால் இதை நிறைவான மாநாடு என்று சொல்ல முடியாது. இந்த அதிருப்திகளும் மாநாட்டின் வெற்றிக்கு வழி சமைத்தன'' என்று குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் வாழ்வில் எண் மூன்றின் (3) முக்கியத்துவம்

- ★ கன்னித்தாய் இயேசுவைக் கருத்தாங்கி 3 மாதம் எலிசபேத்திற்கு பணிவிடை செய்தாள் (லூக்கா 1:56).
- ★ குழந்தை யேசுவுக்கு ஞானியர் (3) பொன், தூபம், வெள்ளைப் போளம் காணிக்கையாக்கினர் (மத். 2:11).
- ★ இயேசு 12 வயதில் பாஸ்கா பண்டிகையில் மூன்று நாட்களின் பின் தாய் தந்தையரால் கண்டுபிடிக்கப்பட்டார் (லூக். 2:45,46).
- ★ இயேசு திருமுழுக்குப் பெற்றபோது மூவொரு கடவுளின் பிரசன்னம் காணப்பட்டது (மத். 3:13—17).
- ★ இயேசு பாலை வனத்தில் மூவகைச் சோதனைகளையும் வென்றார் (லூக். 4:1—13).
- ★ விதைப்பவன் உவமையில் மூவகை நிலங்களையும், மூவகைப் பலன்களையும் இயேசு விளக்கினார் (மத். 13:18—23).
- ★ புளிப்புமா உவமையில் புளிக்காரத்தை பெண்ணொருத்தி 3 படி மாவில் பொதித்தாள் என்று விளக்குகிறார் (மத். 13:33).
- ★ பொற் காசுகள் உவமையில் மூவகை தாலந்தையும் மூவகை மனிதரையும் விளக்குகிறார். (லூக் 19:11—27)
- ★ இயேசு உருமாறியபோது இராயப்பர், யாகப்பர், அருளப்பரை தம்முடன் அழைத்துச் சென்றார் (மத். 17:1).
- ★ மறுரூப மலையிலே இராயப்பர் இயேசுவிடம் "உமக்கும் மோயீசனுக்கும், எலியாசுக்குமாக 3 கூடாரம் அமைப்போம்" என்று கூறுகிறார் (மத். 17:3,4).
- ★ ஏழு அப்பம் பலுகியதில் "இம்மக்கள் மூன்று நாட்கள் என்னோடு இருக்கின்றனர்" என்று இயேசு கூறுகின்றார் (மாற். 8:1—3).
- ★ இயேசு தாம் பாடுபட்டு மூன்று நாட்களின் பின் உயிர்ப்பேன் என, பாடுகளை மும்முறை அறிவித்தார். (மாற் 8:31—33,9:30—32,10:32—34).
- ★ இயேசு இராயப்பரிடம், மும்முறை என்னை அன்பு செய்கின்றாயா என்று கேட்டு திருச்சபையின் தலைவராக ஏற்படுத்தினார் (அரு. 21:15—17).
- ★ இயேசு, தம்மை இராயப்பர் மும்முறை மறுதலிப்பார் என்று சொன்னார் (லூக். 22:31—34).
- ★ இராயப்பர் இருமுறை சேவல் கூவுமுன் மும்முறை இயேசுவை மறுதலித்தார் (லூக். 22:56—60).
- ★ பிலாத்து யேசுவிடம் மூன்று கேள்விகள் கேட்டான் மூன்றிக்கும் இயேசு விடை பகர்ந்தார் (அரு 18:33—37).
- ★ இயேசு ஆலோசனைக்குழு, பிலாத்து, ஏரோது ஆகியோரால் விசாரிக்கப்பட்டார் (லூக். 22:66—23:5).
- ★ சிலுவையின் பாதையிலே மூவர் இயேசுவுக்கு ஆறுதல் அளித்தனர் (சிரேனூர் சீமோன், வெரோனிக்காள் ஜெருசலேம் மகளிர்) (லூக். 23:26—32).
- ★ சிலுவையின் பாதையிலே இயேசு மும்முறை தரையில் வீழ்ந்து எழுந்தார்.
- ★ இயேசு தமது பகிரங்கப் பணியை மூன்று வருடங்கள் செய்தார் (30 33 வயது வரை).
- ★ இயேசு சிலுவையிலே மூன்று ஆணிகளிலே தொங்கினார்.
- ★ இயேசு சிலுவையில் உயிர் விடுகையில் இயேசுவின் தாய், கிளையோப்பாவின் மனைவி மரியாள், மதலேன் மரியாள் ஆகிய மூன்று பெண்கள் நின்றார்கள் (அரு. 19:25).
- ★ இயேசுவின் சிலுவையிலே பொறிக்கப்பட்டிருந்த வாசகம் எபிரேயம், கிரேக்கம், லத்தீன் ஆகிய மூன்று மொழிகளில் இருந்தது (அரு. 19:19—20).
- ★ இயேசு இறக்கும் போது ஏறக்குறைய பி. ப. 3-00 மணி (மத். 27:45—47, லூக். 23:44).
- ★ இயேசுவுக்கு கைகள், கால்கள், விலாவிலும் பெரும் காயங்கள் ஏற்பட்டன (மத். 19:34).
- ★ இயேசு தாம் வாக்களித்தபடியே அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் (லூக். 24:5—8).
- ★ கல்லறையை விட்டு வந்த மதலேன் மரியாள், அருளம்மாள், யாகப்பரின் தாய் மரியாள் இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்ந்தனர் (லூக். 24:1—10).

தொகுப்பு : அ. பீற்றர் (ராஜன்)
யாழ். மறைக்கல்வி நிலையம்

## சிறுகதை இலட்சியத்தின் உயிர்ப்பு

கதிரவனும் உதித்து எழுந்து உறங்கிக்கொண்டிருந்த உயிரினங்களை உயிர்க்கப் பண்ணிக்கொண்டிருந்தான். மெல்ல மெல்ல அவனொளியின் பிரகாசம் அந்தக் கிறிஸ்தவ கிராமத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

ஆனால் விதவையான கண்ணம்மாவின் குடும்பம் மட்டும் ஏனோ கனத்த இருளிலே கவிந்து கொண்டிருந்தது ஒளியில்லை, அங்கு எதற்கும் வழியில்லை. அவள் விழிகளிலே கண்ணீர் கரைந்து கொண்டிருந்தது, ஆசைமகள் பள்ளியில் வீழ்ந்த செல்லினால் படுகாயத்துடன் மருத்துவ மனையில்!! என்ற நெஞ்சம் வெடிக்கும் துன்பச் செய்தி தான் இந்தக் கண்ணீரின் காரணமோ? அவளது மனம் நீரில்லாவிடத்து மீன் போல துடிதுடித்தது அதைப் பார்க்க, அவளுக்கு ஆறுதல் கூற ஆட்கள் யாரையுமே அங்கு காணவில்லை. வறுமையும், வெறுமையும் அவளை வளைத்துக் கொண்டதிற்கு அவள் தான் என்ன செய்வாள்?

ஆனால் இவளின் அவலக் குரல், அன்னியனின் ஆதிக்க வெறியினால் சொந்த பந்தங்களை விட்டுப்பிரிந்து அடைக்கலம் தேடி அயல் வீட்டில் இருந்த அன்பரசனின் செவிக்கு எட்டுகின்றது. ஆம். இவன் தான் எவ்வளவோ. வசதி வாய்ப்புக்கள் இருந்தும் தன் தாய் மண்ணின் மீது, ஏன் அதைவிட மேலாகத் தன் மக்கள் மீது கொண்ட அன்பின் நிமித்தம் அன்னிய நாடுகளுக்குச் செல்லாது, மக்களின் மனவேதனைகளைத் தன் நெஞ்சில் சுமந்தவனாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் இலட்சிய வாதி.

இவனுக்கே உரித்தான உதவி செய்யும் உள்ளம் உதவ விரைகின்றது. தன் அறிவையும் செல்வாக்குகளையும் பயன்படுத்தி பல வைத்திய நிபுணர்களைச் சந்தித்து அந்த இளம் பெண்ணுக்கு உயிர் கொடுக்க முற்படுகின்றான். அவனின் வள்ளல் தன்மை எந்த அளவிற்கு உயர்கின்றது. என்றால் உடலில் ஓடும் உதிரத்தையும் அவன் உவந்தளிக்க உறுதி கொள்கின்றான். இதனால் உலகிலே அவள் உயிர் வாழக் காரணமாகின்றான். இதனால் அந்தத் தாயின் கண்களுக்கும், மகளின் கண்களுக்கும் அவன் கையெடுத்துக் கும்பிடும் தெய்வமாகக் காட்சி தருகின்றான்.

இவ்வாறாக அவர்களது உறவும் மேலும் மேலும் வலுப்பெறத் தொடங்கின. எள்ளி நகையாடிப் பரிகசித்து மற்றோர் வாழ்வை கேலி செய்து இழித்துரைக்கும் சந்ததியினரில் அவர்களின் சுற்றத்தாரும் உறவினரும் விதிவிலக்கல்ல, இதனால் அன்பரசனின் நிகரில்லா தியாக வாழ்வு அவர்களின் இயல்புக்குத் தீனியாக அமைகின்றது. அவர்களது அன்புறவுக்கு கை, கால், மூக்கு ஏன் வாலும் வைத்தாகி விட்டது.

அன்று கண்ணாவின் குடும்பத்தில் வீசிய புயல் இப்போது அன்பரசனின் பக்கம் திரும்பி சூறாவழியாக மாறி அவனையே சுழன்றடிக்கச் செய்கின்றது.

அவன் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவனாக இந்த அவப் பெயரை தாங்க சிறிதும் சக்தி அற்றவனாக சிந்தை கலைந்து அவனது வாழ்க்கைப்படகு திசைமாறியதுபோல் காட்சியளித்தது. அவன் தனது சொந்த கிராமத்தை விட்டு வெளியேற காரணமான அன்னியனின் செல்லடிகளை விட இம்மக்களின் சொல்லடிகள் அவனது உள்ளத்தை வன்மையாகத் துளைத்தன.

அந்த மக்கள் மேல் வெறுப்பும், ஆத்திரமும் அடைந்தவனாக இக்கிராமத்தை விட்டு வெளியேறுகின்றான். பயணம் தொடங்கி விட்டது. ஆனால் முடிவிடம் அவனுக்கே புரியாத புதிராக இருக்கின்றது. அவன் தன் இலட்சிய வாழ்வை உணரும் ஓர் உன்னத சமுதாயத்தை தேடி நடக்கின்றான். நடந்து கொண்டே இருக்கின்றான்.

வழியிலே அவனது கையில் "மேய்ப்புப்பணிமகாநாடு" பற்றிய மையப்பொருள் அடங்கிய பாதுகாவலன் சிறப்பிதழ் கிடைக்கின்றது. உடனே அவனின் நம்பிக்கை இழந்த வாழ்வின் விடிவெள்ளி உதிக்கின்றது. ஆம். இம் மேய்ப்புப்பணி மாநாட்டின் ஊடாகத்தான் ஏங்கித் தவிக்கும் சமுதாயம் உருவாகும். அதனுடாக ஓர் நாள் அவனின் இலட்சியம் உயிர் பெறும் என்ற தளராத நம்பிக்கையோடு தொடர்ந்து ஓர் முடிவுக்கு வருகின்றான். தான் எங்குமே போவதில்லை என்று தீர்மானித்தவனாய் மீண்டும் அக்கிராமத்திற்கே திரும்பிச் செல்கின்றான். பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி ஓடுவதால் அதில் இருந்து தப்ப முடியுமா? சவால்களைச் சந்தித்துச் சரித்திரம் படைக்க மனதில் உறுதி கொள்கின்றான். அவன் இலட்சியம் மீண்டும் உயிர் பெறுகின்றது.

எஸ். ஏ. றொஷான்
உயர் குருமடம்
கொழும்புத்துறை

## உயிருட்டும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான். ஒரு போதும் சாகான்" (அரு. 11 : 25) என்ற கிறிஸ்துவின் வாக்கில் நம்பிக்கை வைத்து, நம்பிக்கையின் வாழ்வு வாழ, விசுவாச வாழ்வு வாழ இறைவனின் உயிர்ப்பு உயிருட்டட்டும்.

அ. மோசஸ் தேவரட்ணம்
உடுப்பிட்டி/மிஷன் கல்லூரி

## உயிர் பெற்ற ஆண்டவர்

பாரிதனைத் தூய அன்பாலே ஆள வந்த
பரன் ஏசு மீது பாரச் சிலுவை வைத்து
காறித் துப்பி கைகளில் ஆணிய டித்து
கனிவில்லார் சிலுவையிலே அறைந்து கொன்றார்.
சூரியனைக் கைகளினால் மூடும் போக்காய்
சுதன் ஏசு தனைக் குழியில் அடக்கி விட்டார்
நீரில் மூழ்கி குளிப்பவன் பின் எழுவது போல்
நேயமகன் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

கல்லறையைக் காவல்காத்த சேவகரும்
கர்த்தனவர் உயிர்பெறலைக் கண்டுவிட்டார்.
சொல்லிவிட முடியாத வியப்பில் ஆழ்ந்தோர்
சுற்றிதரை மீதினிலே மயங்கி வீழ்ந்தார்
மெல்ல அவர் கண்விழித்துப் பார்த்த போது
மேலெழுந்து வான் நோக்கிச் செல்லுகின்றார்
நல்லவர்கள் நெஞ்சினிலே நாளும் போதும்
நம் மீட்பர் உயிர்பெற்று வாழுகின்றார்.

காலையிலே கல்லறைக்கு வந்த மூன்று
கன்னியர்கள் கல்லறையும் திறந்தி ருக்க
பேழையிலே கொண்டு வந்த வாசனையை
பக்கத்தில் வைத்து விட்டு பதைப தைத்தார்
சோலைமலர் போலவந்த வானதூதர்
தேவனையா தேடுகின்றீர்? அவரு யிர்த்தார்
ஆலை சங்கு ஓசையென அதனைக் கூற
அப்போதே சீடரிடம் அவர் விரைந்தார்.

மேரி மஞ்சுரிக்கா ஆனந்தராஜா
நெல்லியடி, கரவெட்டி.

## உருவகக் கதை பகிர்தல்

தங்களின் எஜமான் வீட்டில் நடந்து கொண்டிருந்த விருந்தில், விருந்து நடக்கின்ற மேசையில் கீழ் விழுகின்ற இறைச்சித் துண்டுக்காக அந்த இரு நாய்களும்காத்துக்கொண்டிருந்தன. எஜமானின் தட்டிலிருந்து விழுந்து விட்ட ஒரு இறைச்சித்துண்டை எடுப்பதற்காக இரு நாய்களும் தம் பலமெல்லாம் சேர்த்து சண்டையிட்டுக் கொண்டிருந்தன. நான் தான் இந்த வீட்டுக்கு முதலில் வந்தனான், எனக்குத் தான் இதுசொந்தம்என்றதுஒருநாய். நான்தான் இந்தமுயலைப் பிடித்தனான் எனக்குத் தான் இது சொந்தம் என்றது மற்ற நாய்.

வேப்ப மரம் ஒன்றிலிருந்து இந் நிகழ்வை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த காகம் இவர்கள் என்ன பிறவிகள், இன்றைய நன்நாளிலே மனிதர்கள் சாப்பாட்டுக்கு அடிபடுவதைப் போல அடிபடுகிறார்களே, இவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற நினைப்பில் பூனை போல் பதுங்கி புலி போல பாய்ந்து இந்த இறைச்சித் துண்டை எடுத்து வந்தது. வந்த உடன் கா...கா... என கரைந்து தன் தோழர்களை கூப்பிட்டு அந்த இறைச்சித் துண்டைப் பகிர்ந்து உண்டு கொண்டிருந்தது. இதைக் கண்ட இரு நாய்களும் சரியான மூளையில்லாத காகம் தான் தனிய சாப்பிடுகிறதை விட்டு மற்ற காகங்களை கூப்பிட்டு சாப்பிடுகுது என எள்ளி நகையாடின.நாய்களின் நளினத்தை உணர்ந்த காகம் "அண்ணாமாரே! எங்களுக்கு கிடைக்கிறதை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்பதிலே தான் உண்மையான மகிழ்ச்சி இருக்குது. இதைத் தான் இராப்போசன வேளையில் தன்னைப் பிய்த்து மக்களுக்குக் கொடுத்த இயேசுவும் சொல்கிறார். எனவே இன்றிலிருந்தாவது மீட்பர்இயேசு கொண்டு வந்த பகிர்வு என்ற பண்பை வாழப் பழகிக் கொள்ளுங்கோ" எனக் கூறிவிட்டு அந்த வேப்ப மரக் கொப்பிலிருந்து பறந்து போனது காகம்.

S. J. [illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமைக் குரல் ஆய்வரங்கு



(இவ் ஆய்வரங்கில் பரிமாறப்படும் கருத்துக்கள் மேலும் ஆராயப்படுவதற்குரியவை)

## மண்ணும் மன்னனும் மதமும்

★ அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் o. m. i.

### விடுதலையின் வேதனைத் துருவங்கள்

1. நிலமற்ற மக்கள் / மக்களற்ற நிலம்
2. அரசனற்ற மக்கள் / மக்களற்ற அரசன்
3. ஆண்டவனற்ற ஆலயங்கள் / ஆலயங்களற்ற ஆண்டவன்
4. மனிதனை இழந்த தெய்வம் / தெய்வத்தை இழந்த மனிதன்

மேலே கூறப்பட்டவை யூத மக்களின் அனுபவங்கள் மட்டுமன்றி விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொரு இனத்தின் அனுபவங்களாக மாறும். எமது தமிழ் மக்களின் தற்போதைய நிலையில் மேற்கூறப்பட்டவை எவ்வாறு ஒத்திருக்கிறது என்பதை ஆராய்வோம். இவ்வனுபவங்கள் எமக்கு நிகழ்வதைப்பற்றி மகிழ்ச்சியடைய வேண்டுமேயன்றி அதிர்ச்சி அடைவதற்கில்லை. ஆனால் மனிதன் விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் நிற்கும் போது, நாம் இவ்வளவு காலந்தாழ்த்தி, எப்போதோ தாண்டியிருக்க வேண்டிய ஆதிக்கட்ட நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிருப்பது தான் கவலையைத் தருவதாகும்.

### நிலமற்ற மக்கள்

இலங்கைத் தீவிலே வாழும் மலையகத் தமிழ் மக்கள் எங்குமே நிலமற்ற அகதிகளே. இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரையில் வட கிழக்கு மாகாணங்களில் அரசாங்க உறுதி கொண்ட காணிகள் உண்டு. இலங்கைத் தமிழரையும் நிலமற்ற மக்களாக மாற்றுவது தான் இன வாதிகளின் உள் நோக்காக இருந்தது. அதன் வெளிப்பாடாக அவர்களது உரிமைத் தணிப்பு, உரிமை மறுப்பு, உரிமை அழிப்பு போன்ற படிப்படியான நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இந் நிலைகளை இனங்காணத் தொடங்கிய தமிழர்கள் உரிமைப் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மலையகத் தமிழர்களும் தங்கள் தூக்க நிலையிலிருந்து அரளத் தொடங்கி விட்டார்கள்.

நிலம்தான் உடல், மக்கள் அதன் ஆன்மா. எனவே நிலமற்றவன் உடலற்றவன், அவன் உண்ண முடியாது. ஆகவே உயிர் வாழ முடியாது போன்ற புரட்சிகரமான சிந்தனைகளை அகதிகளாக வாழ்ந்த யூதமக்களுக்கு ஒரு சில விடுதலைச் சிந்தனையாளர்கள் ஊட்டியதை அவர்களது போராட்ட வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது.

விவிலியப் பின்னணியிலே ஆதி ஆகமத்தில் காயீனுக்கும் ஆபேலுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடு கூட நிலத்தினால் ஏற்பட்டதாக இருக்கலாம்என்பது ஒரு சில விரிவுரையாளர்களின் கருத்து. பயிரிடும் காயீனுக்கும், மேய்ச்சல் நிலம் தேடிய ஆபேலுக்கும் ஏற்பட்ட பிணக்கு நிலத்தை ஒட்டியது என்பது அவர்கள் கருத்து. மேலும், ஆபிரகாமுக்கும் லோத்துக்குமிடையே ஏற்பட்ட பிணக்கு எல்லைப் பிரிவில் முடிந்தது. நீ இடப்பக்கம் போனால் நான் வலப்பக்கம் போகிறேன். நீ வலப்பக்கம் போக விரும்பினால் நான் இடப்பக்கம் போகிறேன் (ஆதி 13:9) என்று பாச உறவையும் பறக்கவிட்டு பாகம் பிரிப்பதில் முடிந்தது.

மனோவியல் பின்னணியில் ஆக்கிரமிப்பதும், ஆதிக்கம் செலுத்துவதும், அடிமைப் படுத்துவதும் மனித மனத்தோடு ஒட்டிய ஒரு நாட்பட்ட (CHRONIC) நோயாகும். இக் கொடிய நோய்க்குத் தமிழ் மக்களாகிய நாம் எது விதத்திலும் விதிவிலக்கானவர்களல்ல. உலக அமைப்பை ஆராய்ந்தால் அது வல்லரசுகள் என்றும், வளர்ந்து வரும் நாடுகள் என்றும் தரப்படுத்தலும், வகைப்படுத்தலும் பல.

ஆன்மீகப் பின்னணியில் மண்ணாசையால் மாண்டவர்கள் பல கோடி. மற்றவர்களை மாளச் செய்தவர்களும் பல கோடி. உலகத்தையே ஆதாயமாக்கிக் கொண்டாலும், தனி மனித அமைதி என்பது, தனக்குள்ளதெல்லாவற்றையும் விற்றுப் பெறும் புதையலாகும் (மத். 13/44) என்பது நற்செய்தி ஏடுகளின் சாரமாகும். ஆண்டவனின் தோட்டத்திலே மனிதன் ஒரு பயிரிடுபவன் மட்டுமே என்பது ஆன்மீக நோக்கு (Man is only a farmer in the land of God). அருள்திரு. TEILHARD DE CHARDIN என்றதொல்பொருள்ஆராய்ச்சி நிபுணர் அதை இன்னொரு விதத்தில் வடித்தார்: உலகம் ஆண்டவனின் திருப்பலிப் பீடம். மக்கள்தான் அதன் பலிப் பொருட்கள். கிறிஸ்துவின் அருள் நன்மை உருவைப் (CHRISTOGENESIS) பெறுவதே மனிதனின் உலகியல் திருப்பயணத்தின் இலக்காகும் என்பது அவரது ஆன்மீகத்தின் சாரமாகும்.

பாவி மனிதன் இப் பரந்த உலகைக் கண்ட துண்டமாகப் பிரித்தாலும் பேராசைப் பிடியில் சிக்குண்டிருக்கும் போது இவ்வான்மீக நோக்கு அவன் செவிகளில் ஏறவா போகிறது? இருப்பினும் விண் வீடு இம் மண் மீது தோன்றும் அப் பொன்னாளைக் கண்முன்னே வைத்து கலங்காது, காலந் தாழ்த்தாது வீறு நடை போடுவோம்.

(''மக்களற்ற நிலம்'' தொடரும்)

## திருமறை அறி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறாக, சமூக நீதியையும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பேணும் கடமை தனக்குண்டு என்பதைக் கிறிஸ்தவன் அறிவான். ஏனெனில், இறைவன் மட்டுமே அறிந்த உச்சநிலையை அடையும்வரை மனுக்குலம் விருத்தி செய்யப்பட்டு, நிறைவாக்கப்பட வேண்டும். அநீதியும் வஞ்சனையும் சூழ்ந்துள்ள ஒரு சமுதாயத்தில் கிறிஸ்தவனானவன் சகல விதமான சுரண்டல், தப்பெண்ணம், சக குடிமக்களைத் துன்புறுத்தல் ஆகியவற்றை எதிர்க்க வேண்டும். பிற மக்களின் உயர்வுக்காக அவன் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். மனுக்குலத்தை உயர்விக்கும் பணி, ஒரு கிறிஸ்தவனுக்கு தன்னில் தானே உள்ளார்ந்த பெறுமதியுள்ள ஒரு நோக்கமாக அமைகின்றது. பல்வேறு மதக் கொள்கைகளையுடைய அநேக மனிதருடன் ஒன்று சேர்ந்து அவன் இந் நோக்கத்திற்காக உழைக்கமுடியும். ஆனால் உலகை ''மனிதத் தன்மை உடையதாக்குவது'' மட்டும் ஒரு கிறிஸ்தவனுக்குப் போதாது. ஏனெனில் அவன் திருச்சபையின் ஓர் அங்கத்தவன். அனைத்து மக்களுக்கும், இறைவன் அவர்களை நேசிக்கிறாரென்றும், தனது அன்பினை அவர்களுக்கு எடுத்துக் கூற தனது ஒரே மகனான இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் என்றும் அறிவிப்பது திருச்சபையின் பணியாகும்.

(வளரும்)

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 8 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 5 | எம் வாழ்வின் வழி யேசு |

வாழ்வழிக்கும் வார்த்தை : மத்தேயு 7 : 8

'' ஏனெனில் கேட்கிற எவனும் பெறுகிறான்;
தேடுகிறவன் கண்டடைகிறான்;
தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் '' யேசு

★ ★ ★

## காவலன் களஞ்சியம் 94

பார்வை I இதழ்கள் 1, 2, 3, 4 ஐப் படிக்கவும்

(A) நிரப்புக.

1. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு .................... .................... கொடுக்க வேண்டும்.
2. கல்வி கற்போரை மையமாகக் .................... .................... ஒழிக்கப்படவேண்டும்.
3. '' செபத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை '' .................... .................... நிம்மதி நிலவும்.
4. இலங்கைத் தமிழ் மக்களின் .................... .................... விட்டது.
5. வருங்காலத் தூதுப் பணியாளரை .................... .................... தயார் செய்ய வேண்டும்.

(B) விடை தருக.

1. 1894இல் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம்; அப்புனிதரின் பெயர் தவறுதலாக மாறிவிட்டது. அப்புனிதரின் பெயர் என்ன?
2. '' தமிழீழமும் கிறிஸ்தவமும் '' என்னும் தலைப்பில் நல்வாழ்வு நிலையத்தில் உரையாற்றிய அருட்தந்தை யார்?
3. '' சாதி அமைப்புகள் நிறைந்த யாழ்ப்பாணச் சமூகத்திற்கு கிறிஸ்துவ மதிப்பீடுகளைக் கொடுத்தல் '', என்ற தலைப்பில் ஆய்வுசெய்து சமூக விஞ்ஞானத்துறையில் முதுகலைமாணிப் பட்டம்பெற்ற குருமணி யார்?
4. ' அன்புப் பெற்றோருடன் இணைந்து கிறிஸ்துவின் அன்பை உலகின் நாற்றிசையும் பரப்புவோம்'' என்ற கருப்பொருள் இவ்வாண்டில் எச்சபைக்குரியதாகும்.
5. காலில் செருப்பில்லாது கல்லையும் முள்ளையும் கடந்து ஐந்து மைல் நடந்து கற்ற புனிதர் யார்?

புள்ளித்திட்டம் (A) $5 \times 12 = 60$
(B) $5 \times 8 = 40$

முடிவுத் திகதி 15-04-1994

பரிசு ரூபா 25 ( மிகக்கூடிய புள்ளி பெறும் நற்பேறாளர் ஒருவருக்கு )

★ விடைகளுடன் காவலன் களஞ்சிய வினாக்கள் பற்றிய உங்கள் உணர்வையும் எழுதுக.

அன்பின், அன்பு விழி

இறைவனிடம் சரணடைந்த

## 31ஆம் நாள் நினைவு தினம்



திருமதி மேரி இராசமலர் நவரத்தினம்

தாயின் மடியில் 12-10-1930
இறைவனடியில் 22-02-1994

கிறிஸ்து உன்னை வானரசில் சேர்த்தருள்வாராக (சங். 113)

கருணையின் வள்ளலே! நீதியின் தேவனே! மன்னுயிர்களிடத்தில் இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமக்கு இயல்பாமே. உமது இரக்கத்தால் மீட்படைவதாக நம்பியிருந்த உமது அடியாள் திருமதி நவரத்தினம் மேரி இராசமலர் என்பவவை விரைவில் உம்மிடம் அழைத்துக் கொண்டது போல விரைவாகவே அவவின் ஆன்மாவை உமது நித்திய வான் வீட்டில் இளைப்பாறச் செய்தருள வேண்டுமென்று உம்மை இரந்து மன்றாடுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
சகோதரன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1994 பரிசுத்த வார திருவழிபாடுகள்

### யாழ். மரியன்னை பேராலயம்

**குருத்தோலை ஞாயிறு : மார்ச் 27**
காலை 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி
ஆயரின் கூட்டுத் திருப்பலி
2ம், 3ம், திருப்பலிகள் காலை 8.00, மாலை 5-30

**பரிசுத்த வாரத்தின் திங்கள் : மார்ச் 28**
மாலை 5-00 திருத்தைலம் மந்தரிக்கும் ஆயரின் கூட்டுத் திருப்பலி

**பரிசுத்த வாரத்தின் வியாழன் : மார்ச் 31**
மாலை 5-00 நற்கருணை வழிபாடு

**திருப்பாடுகளின் வெள்ளி : ஏப்ரில் 01**
காலை 6-30 திருச்சிலுவையின் சிந்தனை (பேராலய முன்றலில்
மாலை 3-30 வார்த்தை வழிபாடு
திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து

**புனித சனிக்கிழமை ஏப்ரில் 02**
இரவு 11-30 பாஸ்கா திருவிழிப்பு சடங்கு

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு : ஏப்ரில் 03**
காலை 5-30 திருப்பலி
,, 6-30 ஆயரின் கூட்டுத்திருப்பலியும்
பாப்பிறையின் ஆசீரும்
3ம், 4ம் திருப்பலிகள் காலை 8-00; மாலை 5-30

யாழ். மரியன்னை பேராலயம் — பங்குத்தந்தை

---

நம் மண்ணில் பணிபுரிந்த குருக்கள்

## இறைபதம் அடைந்த தினம்

நன்றியுடன்

## செபிப்போமாக

| | | |
|---|---|---|
| **மார்ச்** | | |
| 31 | சாள்ஸ் செந்தில்வேல் o.m.i. | 1993 |
| **ஏப்ரில்** | | |
| 02 | A. S. சிங்கராயர் o.m.i. | 1976 |
| 04 | J. டெ விற் o.m.i | 1978 |
| 05 | A. S. யோசவ் o.m.i. | 1948 |
| 06 | P. நிக்கலஸ் o.m.i. | 1969 |
| 11 | S. கோமஸ் o.m.i. | 1978 |
| 13 | J. M. J. லெ யோன் o.m.i. | 1906 |
| 14 | A. றோபியக் o.m.i. | 1895 |
| 15 | எமில் திரியன் o.m.i. | 1881 |
| 15 | L. J. அகஸ்ரின் o.m.i. | 1972 |
| 17 | பிரான்சிஸ் சேவியர் * | 1886 |
| 18 | அட்றியன் டமோ o.m.i. | 1887 |
| 21 | மைக்கல் பிளசோ o.m.i. | 1921 |
| 21 | லிகோரி றொட்றிக்கோ o.m.i. | 1931 |
| 22 | F. X. சரவணமுத்து * | 1949 |
| 24 | அட்றியான் சென் ஜெனிஸ் o.m.i. | 1901 |
| 28 | J. A. ராஜநாயகம் o.m.i. | 1976 |
| 30 | T. M. F. லோங் o.m.i. | 1961 |

( * யாழ் மறைமாவட்டக் குரு )

---

# மண்ணின் மக்களை முழுமையில் மீட்க .... செல்வோம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காற்றுந் தணியுதில்லை, அலையும் அமர்வதாய் இல்லை நேற்றும் இருந்தது போல்தான் இன்றும் இருக்கிறது. இன்று இருப்பது போல்தான் நாளையும் இருக்குமோ, நாம் அறியோம். இறைவா நீர் எம்முடன் இருப்பின் யார் தான் எமக்கு வேண்டும்?

யாழ் தலத்திருச்சபை சுமுகமாக நடத்திய நீண்ட பயணத்தின் பின் ஒரு பூகம்பத்தை அனுபவிக்கிறது என்றும், அதனால் நிலைத்து நிற்கும் நீங்காத அதிர்ச்சியை உண்டு பண்ணி இருக்கின்றதென்று ஆரம்பத்தில் சொன்னேன்.

எல்லாப்பக்கத்திலும் மரணத்தையும் அழிவையும் சந்திப்பவர்களாகவும், நீதி சமாதானத்தைத் தேடி அலையும் அகதிகளையும், அந்தரிப்பவர்களையும் இரத்தத்திலும் வியர்வையிலும் தோய்ந்த மண்ணை மண்டியிட்டு விட்டு, மேய்ப்பரும் மக்களுமாக ஒரு வாரத்தின் முன் மேல் மாடி ஏறினோம்.

### காற்றுச் சொன்ன கதை

மரித்தவர்களின் சவக்காலையில் இருந்து வந்தது காற்று,... எம் மண்ணில் மடியும் மாவீரரையும் மாசற்ற உயிர்ப்பலிகளையும் நினைவு படுத்தின. கடலில் இருந்து வந்த காற்று சிவந்த எழுத்துக்களிலும், அவலக் குரல்களிலும் மடிந்தவர்களின் கதையைச் சொன்னது. கடலுக்கு அப்பால் மண்டைதீவில் கங்கணம் கட்டிக் காத்து நிற்கும் படைகளில் இருந்து வந்த காற்று பயத்தையும், பதுங்கு குழிகளையும் நினைவூட்டின. இவை அனைத்தின் மத்தியிலும், இறைவனை ஒளியாக நினைவு படுத்தப்படும் சூரியன் கெம்பீரமாக ஒவ்வொரு நாளும் எழுந்தது. ஒளித்தது, சிரித்தது, சிறப்பாக சிந்திக்கவும் வைத்தது. அழகாக வானடியில் சரியும் பொழுது 'ஆண்டவரே எம்மோடு இன்னும் தங்கியிரும் என்று குரல் எழுப்பினோம். அன்று மேல் மாடியில் ஒதுங்கிய சீடர், மரியாளுடன் செபத்திலும், தியானத்திலும் ஒருமித்து நம்பிக்கை இழக்காது நிகழ்ந்தவை அனைத்தையும் மீளாய்வு செய்வது போல், நாமும் எமது விசுவாசத்தையும், தலத் திருச்சபையின் நிலைப்பாடுகளையும் எமது சூழலில் நிறுத்தி மீளாய்வு செய்தோம். கீழ் மாடியில் இருந்து சுமந்து வந்த பரிதாப அனுபவங்களையும், மேல் மாடியில் காற்றோடு காற்றாய் வீசிய செய்திகளையும், ஏவுதல்களையும், சந்திக்க விட்டோம், சங்கமிக்கச் செய்தோம்.

ஆயர் அவர்கள் கரங்களை விரித்து ஊதிய ஆவியின் சக்தியும் துறவியர், குருக்கள் அழைப்பிற்கிணங்க பெற்ற அருங் கொடைகள் அனுபவங்களும், உலகத்தின் உப்பாய் இருந்தும், ஊமைகள், உரிமைகள் இல்லாதவரென கருதப்பட்ட பொது நிலையினரில் பொலிவாகக் குறிகாட்டிய ஆவியின் குரலும், ஒன்றாக உருண்டு திரண்டு, அலையாக எம்மை ஆட்டி அசைத்தன, இறைவா நன்றி.

நமது உருவின் ஊற்றினை உன்னிப் பார்த்தோம். சங்க ஏட்டினையும் புரட்டிப் பார்த்தோம். எமது தலத் திருச்சபை "யார்" என்று கேட்டோம்? மண்ணின் மக்களை முழுமையில் மீட்க,

1. இம் மண்ணின் இறைவனின் மக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குலம் என்றும், இத்தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் இறைமகன் கிறிஸ்துவையும் அவர் தொடங்கிய இறையரசையும் ஏற்று பணிசெய்யும் சீடர்கள் என்றும் விசுவசித்தோம்.

கிறிஸ்து தன்மையுள்ள சீடர்களாகிய நாங்கள், குழுமமாக இணைக்கப்பட்டு, தலத் திருச்சபையாக உருவாக்கப்பட்டு, இறைவனையும், இறைமகன் கிறிஸ்துவையும் இறையரசைத் தொடர்ந்து உருவாக்கும் ஆவியையும் விசுவசிக்கின்றோம். விசுவசிப்பதைப் போதிக்கவும் போதிப்பதை வாழவும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தோம்.

2. ஆயர் குருக்கள் துறவியர் பொது நிலையினர் அனைவரும் அருங் கொடைகளைப் பெற்று வெவ்வேறு அதிகாரத்தையும், பொறுப்பையும் ஏற்றிருப்பினும், இறைவனின் பிள்ளைகள் என்றும், கிறிஸ்துவின் சீடர்கள் என்றும், ஒரே ஆவியால் தூண்டப்பட்டவர்கள் என்றும், மதிப்பிலும் மாண்பிலும் சமத்துவமும்சுயாதீனமும் பெற்றிருக்கிறோம் என்பதையும் விசுவசிக்கின்றோம்.

அனைவரும் அன்பினைச் சாரமாகக் கொண்ட ஆன்மீகத்தை வளர்க்கவும், தமது அழைப்பிற்கு ஏற்ற தனித்துவ அருங்கொடைகளையும், திருச்சபையின் வழியாக உலகத்தில் இறையரசைக் கொணர பணிக்கு அர்ப்பணிப்போம்என உறுதி கொண்டோம்.

ஒருவரை ஒருவர் அன்பினால் தழுவி, அருளினால் அரவணைத்து, அடிப் படைக் கிறிஸ்தவ குழுமங்களாய் வாழவும், மற்றவர்களுக்கு வாழ் வழிக்கவும் உறுதி கொண்டோம்.

ஏற்றத் தாழ்வு ஒழிய-உடைந்தவர்களை ஒப்புரவாக்க, அடிமைத்தனங்களும் அதன் பாவ வேர்களும் நீங்க நீதி சமாதானம் ஓங்க, ஒன்றாகக் குரல் கொடுப்போம் என எழுந்து நின்றோம்.

போரின் பாதிப்பால் இடம் பெயர்ந்தோர், அகதிகள், ஊனமுற்றோர், உறவற்றோர், உருக்குலைந்தோர், உளம் குலைந்தோர் இவர்கள் அனைவரையும், அருங்கொடை பெற்ற அனைவரும் அன்புக்கரம் நீட்டி அரவணைப்போம் என்றும் ஆவன செய்வோம் என அடித்துச் சொன்னோம்,

மீட்பின் பணியை மிகத் திறனுடன் செய்திட, ஆவியின் ஏவுதலில் அனைவருக்கும் வேலை செய்ய, அமைப்புகள் வேண்டும், ஆணைக் குழுக்கள் வேண்டும். நல்ல பகிர்தல் நடைபெறும் நடுவங்களும் வேண்டும் என்றோம்.

மேய்ப்புப்பணி வளர மேய்ப்பர்களின் பங்கு சிறக்க, மேலதிக மக்கள் வளங்கள் செழிக்க முன்னுரிமைப் பணிகளையும் இனங்கண்டு கொண்டோம்.

இனங்கண்டோம், விசுவசித்தோம், உறுதி கொண்டோம், எழுந்து நின்றோம், குரல் எழுப்பினோம், அடித்துச் சொன்னோம், ஆணையிட்டோம் ஆவியின் ஏவுதல்கள் அத்தனையும் அவசியம் தான் அத்தனையும் ஆகவேண்டுமென்று திடமாகத் தீர்மானித்து விட்டோம்.

ஆனால் தலத் திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாடு அத்துடன் முடிந்து விட்டதா? இல்லவே இல்லை. பல மாதம் சுமந்து பருவத்துடன் பிறந்தாலும், உரி வளர, உருவெடுக்க, உண்மையான ஏவுதல்கள், இம்மண்ணில் கனியாகப் பணியாக எத்தனை தான் நாட்களதோ? எல்லோரும் பங்கெடுத்தோம்.

திட்டங்கள் தீட்டி விட்டோம், தீரமாய்த் தீர்த்து விட்டோம், திருப்தியுடன் வீடு செல்வோம், என கிளம்புவீரோ? ஆமாம் வீடுதான் போக வேண்டும், அதே பங்கு தான், வந்த வழி போகாதீர், அந்த வழி உமது சொந்தவழி. இப்போ செல்வது ஆவியின் வழியல் செல்வீர். ஆவன செய்ய முயல்வீர்,

மேல் மாடி ஏறியவர் கீழ் மாடி திரும்பியதும் மேய்ப்புப் பணி மாநாடு ஒவ்வொருவரின் உள்ளத்திலும், ஒவ்வொரு பங்கின் இல்லத்திலும், ஒவ்வொரு ஆலய அடிமட்டத்திலும், மேய்ப்பர்கள் தனித்திருந்து "நாம் மேய்க்கின்றோம், நீவீர் மேயுங்கள் என்ற கதை முடிந்தது, புதிய யுகம் ஆரம்பிக்கட்டும். தூய ஆவியின் ஏவுதலை அடக்க வேண்டாம், அமுக்க வேண்டாம். ஆங்காங்கே அவனவனின் அவளவளின் அருங் கொடைக்கேற்ப அனைவரும் அன்புடனும், பண்புடனும் பணியாற்ற எமது சபை விண்ணரசின் விழுமியத்தை மின்னி மின்னிக் காட்டும் சபையாகச் செல்லட்டும். இங்கே கூடியிருக்கும் நாம் எவ்வளவு தான் பெலவீனராய் இருந்தாலும் இறைவனின் துணையுடனும் துணிவுடனும், கைகோர்த்து முன் செல்வோம்.

---

மாநாடு தந்த ... (5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## புதியதோர் ஆரம்பத்திற்கான தொடக்க நிகழ்வு

மாநாட்டின் இறுதி நாளோடு மாநாடு முடிவடைந்து விட்டது எனக் கொள்ள முடியாது. இது ஒரு ஆரம்பத்தின் முடிவு மட்டுமே. (It is an Open - end) இந்த மாநாடு ஒருதொடர் பயணம். மாநாட்டு நிகழ்வுகள் முடிவடைந்து விட்டாலும் மாநாட்டு ஆவி (Spirit of the Convention) எம்மைத் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இம்மாநாடு யாழ். திருச்சபைக்கு ஒரு புதிய திசையை, நோக்கை அடையாளம் காட்டியுள்ளது. இந்தத் திசையில் நாம் பயணிக்க வேண்டும். இது ஒரு கடினமான பயணம். மாநாட்டின் தீர்மானங்கள், கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும்போது பல சிக்கல்களை, பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். பல சவால்களைச் சந்திக்க வேண்டிவரும். ஆனால் தூய ஆவியின் துணையுடன் துணிவோடு முன்னேற வேண்டும்.

மாநாட்டின் இறுதிநாள் அன்று மாநாட்டை முடித்து வைத்து உரையாற்றிய யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பொதுநிலையினரை விளித்துக் கூறியதாவது, "பொதுநிலையினரே! மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உங்கள் பங்குத்தந்தையர்களுக்கு பக்கபலமாக நில்லுங்கள். நிச்சயம் உங்களை நோக்கி கல்லெறி விழும். ஆனால் தாய்த்திருச்சபை உங்கள் பின்னால் நிற்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்."

நடந்து முடிந்த இம்மாநாட்டின் நோக்கம் தொடர்ந்தும் எம் கண் முன்னே இருக்கவேண்டும். மாநாட்டில் கதைத்தவை, விவாதித்தவை தொடர்ந்து நடைபெறவேண்டும். இம் மாநாடு யாழ் திருச்சபையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. புதிய இலக்கை இனம் காட்டியுள்ளது. இந்த இலக்கு நோக்கி எம் பயணத்தை நாம் தொடர வேண்டும். ஆகவே இனித்தான் எமது செயற்பாடுகள் ஆரம்பிக்கின்றன. இனித்தான் எமது பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன. எனவே இந்த மேய்ப்புப்பணி மாநாடு புதியதோர் ஆரம்பத்திற்கான தொடக்க நிகழ்வு மட்டுமே.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q.1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org